
பதிவுஎண் 2041

தனிப்பிரதி விலை அணா ஒன்று





| | | |
|---|---|---|
| எல்லாரு மோர்குலம் எல்லாரு மோரினம் | [வாரப்பதிப்பு] | பிறப்பொக்கு மெல்லாவுயிர்க்குஞ் சிறப்பொவ்வா |
| எல்லாரு மிந்தியா மக்கள், | | செய்தொழில் வேற்றுமை யான் |
| எல்லாரு மோர்நிறை எல்லாரு மோர்விலை | ஆசிரியர் | ஒழுக்க முடமை குடிமை யிழுக்க |
| எல்லாரு மிந்நாட்டு மன்னர் (பாரதி) | ஈ. வெ. இராமசாமி நாயக்கர் | மிழிந்த பிறப்பாய் விடும். (குறள்) |

மாலை க ~ குரோதன-ஹு ஐப்பசி-மீ உ-ஹ (18—10—25) ஞாயிற்றுக்கிழமை ~ மலர் உசு

ஈரோட்டினின்று ஞாயிறு தோறும் வெளிவரும்.

# வருட சந்தா ரூபாய் மூன்றுதான்.

## வெளிநாடுகளுக்கு வருட சந்தா ரூபாய் நான்கு.



மகாத்மா காந்திக்கு ஜே.

வந்தேமாதரம்! அல்லாஹூ அக்பர்!!

### திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

தமிழ்நாடு கதர் போர்டாரால் அத்தாட்சிப்பத்திரம் பெற்ற எங்கள் டிப்போவில் பல ரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளைப் பீசுகள், ஷர்டிங், கோட்டிங், சேட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடிச்சேலைகள், சால்வைகள், அச்சு வேஷ்டிகள் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். பிரதி ஆர்டருடன் 100க்கு 25 ரூ. வீதம் அட்வான்சு அனுப்பவேண்டும். வி. பி அனுப்ப முடியாத வெளிநாட்டு ஆர்டர்களுக்கு பூராத்தொகையும் முன் பணமாக அனுப்ப வேண்டும்.

ஆர். டி. முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா)

### காங்கிரஸ் அத்தாட்சி பெற்ற சுத்த கதர்!

தமிழ் நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும் கிடைக்கும். விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரி)க்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலையம்,
மண்டி வீதி, ஈரோடு. (S. I. R.)

### திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சேட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு உடனே ஆர்டர் செய்யுங்கள், ஆர்டர்கள் 100-க்கு 25 ரூபாய் வீதம் அட்வான்ஸ் அனுப்பவேண்டும். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன் பணமாகவே அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்) தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி.

ஸ்ரீமான் என். கே சங்கரப்ப செட்டியார் கைநூல் கைத்தரியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்குவிற்று வருகிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள்
காரியதரிசி, கத்தர் இலாகா.

விலாசம்:—

என். கே. சங்கரப்ப செட்டியார், கத்தர் ஸ்டோர்,
திருப்பூர், (தென் இந்தியா)

### திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

பல ரகம்வேஸ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சேட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன்பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம் எஸ் சிதம்பரம் செட்டியார் முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தரியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்குவிற்றுவருகிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள் காரியதரிசி கத்தர் இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா)

## செய்நித்திரட்டு.

மத்திய மாகாண சுயராஜ்யக் கக்ஷியை ச் சேர்ந்தவரும், அக்கக்ஷியினராலேயே அம்மாகாண சட்ட சபையின் தலைவராகத் தெரிந்தெடுக்கப் பட்டவருமான ஸ்ரீயான் தாம்பே என்பவர், சில தினங்களுக்கு முன்னால் மத்திய மாகாண நிர்வாக சபை மெம்பர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

*

தென் ஆப்ரிபிக்கா இந்தியர் தினமான து நாடெங்கும் இம்மாதம் 11-ந் தேதி கொண்டாடப் பட்டது.

*

லாலா லஜபதிராயின் தேகநிலை நிதானமாகக் குணப்பட்டு வருகிறது, ஆனால் மஞ்சள் காமாலை உபத்திரவம் இன்னும் நீங்கவில்லை. உடம்பு கொஞ்சம் செழுமை யுற்று வருகிறது.

*

அகில இந்தியா தொழிலாளர் காங்கிரசின் 6-வது கூட்டம், 1925 ஜனவரியில் சென்னையில் நடைபெறும். சென்னை மாகாணத்திலுள்ள தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளால் வரவேற்புக் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

*

தமிழ்நாடு மாகாண மகாநாடு காஞ்சிபுரத்தில் நவம்பர் 7, 8-ந் தேதிகளில் நடைபெறும்.

*

கல்கத்தாவைச் சேர்ந்த சேத் சாஜுராம் என்பவர் மலையாளத்தில் ஆரிய சமாஜ வேலைக்கு ரூ. 5000 நன்கொடை அளித்திருக்கின்றனர்.

*

காகோரி ரெயில் கொள்ளை சம்மந்தமாகக் கைது செய்யப்பட்டிருப்பவர்களின் தொகை இது பரியந்தமும் 27 ஆகின்றது.

*

வைக்கம் கோயில் கிழக்குப் புற ரஸ்தாவிலும், அதன் அருகிலுள்ள இடங்களிலும், கிறிஸ்துவர், முகமதியர் உள்ளிட்ட ஜாதி இந்துக்களல்லாத எவரும் செல்லக் கூடாதெனத் தடுத்து விடுவதைப் பற்றி யோசித்துக் கொண்டிருப்பதாகவும், அப்பகுதியைக் கோவில் ரிசர்விற்குள் சேர்த்துவிட அரசாங்கத்தார் எண்ணங் கொண்டிருப்பதாகவும் ஓர் செய்தி கூறுகிறது.

*

காங்கிரசினின்று நூற்போர் சங்கத்தை எடுத்துவிட வேண்டுமென ஸ்ரீமான். கெல்கார், தமது "மாராட்டா" பத்திரிகையில் எழுதியிருக்கின்றார்.

தீபாவளியை யொட்டிச் சென்ற ஒரு மாத காலத்தில் திருப்பூரில் சுமார் இரண்டு லட்ச ரூபாய் மதிப்புள்ள கதர் விலையாயிருக்கிறது.

*

தமிழ் நாடு முழுவதும் முக்கிய பாகங்களுக் கெல்லாம் தென்னிந்திய ரெயில்வே கம்பெனிக்காரர்கள் ரயில மைக்க ஆரம்பித்து பெரு முயற்சி நடை பெறுகின்றது. ஒன்பது ரயில் கிளைப் பாதைகள் வேலை, நடை பெறுகின்றது. (1) கூடலூர் விருத்தாசலம் பாதை. (2) திண்டுக்கல், பொள்ளாச்சி பாதை. (3) திருச்சி, விழுப்புரம் பாதை. (4) திருச்சி, காரைக்குடி பாதை. (5) மாயவரம், தரங்கம்பாடி பாதை (6) நிலாப்பூர் பாதை. (7) விருதுநகர், தென்காசி பாதை இவைபோன்ற இன்னும் இரண்டு பாதைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

*

டாக்டர் அன்ஸாரி துருக்கியிலிருந்து இந்தியாவைப் பற்றியும், இந்திய முஸ்லீம்களைப் பற்றியும் துருக்கிக்கு உள்ள மதிப்பைப் பற்றி எழுதியிருப்பதில், இந்தியரின் தேசிய இலட்சியங்கள் பலவற்றிற்கும் துருக்கி ஆதரவு தருவதாயும், இந்தியாவின் பூரண சுதந்தரமே உலக சமாதானத்தை அளிக்கும் என்றும் கருதுகிறார்களாம்.

*

மாஜி சுல்தான், அப்துல் மதீத்கான் மௌலானா ஷவுகத் அலிக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். கிலாபத்திற்காக அவர் செய்த சேவையையும், ஹாஜ்யாத்ரீகர்களுக்கு சுல்தான் இப்னேஸாத்துடன் சேர்ந்து பாதுகாப்பு ஏற்படுத்தியதற்கும் அவரைப் பாராட்டி நன்றி கூறப்பட்டிருகிறது.

‡

இரங்கூன் "தேசோபகாரி" ஆசிரியர் ஸ்ரீமான் சுப்பையா நாயுடு "பர்மாவைச் சுரண்டியவர் யார்?" "அடிமைத்தனத்தின் பலன்" என்ற இரண்டு வெளியிட்ட வியாசங்களுக்காக குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட பின், ஜாமீனில் விடுதலை படைந்திருக்கிறாராம். அக்டோபர் மீ 19-ந்தேதி விசாரணை நடக்குமெனத் தெரிகிறது.

‡

ஸ்ரீமான். ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்கள் இம்மாதம் 19-ந்தேதி நூல் நூற்கும் சங்க திறப்பு விழாவை நடத்த தஞ்சைக்கு விஜயம் செய்கின்றார்.


### "தெய்வீகன்"

தேச முன்னேற்றத்தையும், பார்க்கவ குலநலத்தையும், பாஷாபிவிருத்தியையும் நாடி பல பண்டிதர்களால் எழுதித் தரப் பெரும் அரிய கட்டுரைகள் மாதாந்தரத்தில் பொலிந்து கிடக்கும்.

**பார்க்கவர்கட்கு வருட சந்தா ரூ. 2—0—0**

**ஏனையோர்கட்கு வருட சந்தா ரூ. 1-8-0**

மாதிரிப் பிரதி விலை அணா இரண்டு.

காரியஸ்தர்,
"தெய்வீகன்" பொன்மலை, திருச்சி.

---

### பெயர் பெற்ற ஊத்துக்குளி சுத்தக்கத்தர்.

50x16குஞ்சம் அச்சில் நெசவு அழுத்தமும் நயமுள்ளதாயும் கதர்போர்டின் விலைக்கு விற்கப்படும். வேஷ்டி, துண்டு, காதி ஈரெழை கலர் வெள்ளைக் கோட்டிங் மற்ற எல்லா தினுசுகளும் கிடைக்கும். விலை விபரங்களுக்கு எழுதவும். அட்வான்சுடன் ஆர்டர் செய்யுங்கள்.

K. V. குப்புசாமி அய்யர்,
கதர் வியாபாரம், ஊத்துக்குளி, S. I. R.

---

### "தேசோபகாரி"

பர்மாவில் விடுதலை முழக்கஞ் செய்துவரும் ஓர் தமிழ் வாரப்பதிப்பு.

**வருஷ சந்தா ரூபாய் ஐந்து.**

மானேஜர்,
"தேசோபகாரி" லிமிடெட்.
45-36வது வீதி, ரங்கூன்.

---

மோதிரத்திலும் ஓர் ஆச்சரியம!

### பாரிஸ் லேடிகளின் லீலாவிநோத போட்டோ மோதிரம்.

இம்மோதிரத்தின் ஆச்சரியம் யாதெனில், இதில் கடுகளவு பிரமாணம் துவாரம் உண்டு. அதின் மூலமாகப் பார்க்க அதில் பாரிஸ் தேசத்தின் பெண்மணிகள் பலவித லீலைகளுடன் ஆனந்த சாகரத்தில் மூழ்கியிருப்பதையும், இன்னும் பலவித ஆச்சரியங்களும் காணலாம்.

இதன் கிரையம் 1-க்கு ரூ. 1-4.

### பாரீஸ் லேடிகளின் அழகிய பெட்ரூம் போட்டோ படங்கள்.

இவை பார்ப்போர் மனதுக்கு குதூகலத்தையும், ஆனந்தத்தையும் விளைவிக்கும். பாரிஸ் தேச பெண்மணிகளின் ரூபலாவண்யமும், லீலா விநோதமும் இதில் காணலாம். பெட்ரூம்களில் வைப்பதற்கு இவை வெகு சுந்திரமாயிருக்கும்.

12-படங்கள் கொண்ட செட் 1-க்கு விலை ரூபாய் 2.

ஓ. எம். ஸி. கம்பெனி.
(23-வது பீட்) மதராஸ்.

## தேச விடுதலை.

“தேச விடுதலை” என்னும் தலைப்பிட்டு டாக்டர் என். எஸ். ஹார்டிகர், தமது “வாலண்டியர்” என்னும் ஆங்கில சஞ்சிகையில் எழுதியிருப்பதின் சுருக்கத்தை கீழே வெளியிடுகிறோம்:—

ஓர் தேசம் விடுதலையடைய வேண்டுமாயின் கவனிக்கப்படவேண்டிய அம்சங்கள் பல இருக்கின்றன. அதில் பிரதானமாகக் கவனிக்கவேண்டியது அந்நாட்டின் வாலிபர்களைப் பற்றியே ஆகும். இவர்களுக்கென்று ஓர் இயக்கம் ஏற்பட்டு, அஃது செவ்வனே நடைபெறுவதன் பொருட்டு சரியான பயிற்சி, நிலைவரமான ஒழுங்கு, கட்டுப்பாடான திட்டம் முதலியன இருக்க வேண்டும். வாலிப இயக்கம் ஏற்பட்டு, அதனுடைய கடமையைச் செவ்வனே செய்து கொண்டு போகின்றதா வென்பதைக் கவனிக்க, அதற்கென ஏற்பட்டுள்ள பிரமுகர்கள் கடமைப்பட்டிருக்கின்றனர். ஓர் பெரிய இயந்திரமானது வேலை செய்துகொண்டு வரும்போது, ஓர் திருகாணி போனாலும், ஓர் மோட்டார் செல்லும்போது ஒரு சக்கரத்தில் மட்டும் சேதம் ஏற்பட்டாலும், ஒருவரோடு சம்பாஷிக்கும்போது ஒரு வார்த்தை தவறுதலாக உபயோகிக்கப்பட்டாலும், இவற்றை பூரண உருவகமானதெனக் கூற முடியாது. இயந்திரம் நின்று விடும். மோட்டார் ஓடாது. சம்பாஷணை விபரீதத்தில் முடியும். இதுபோலவே, கட்டுப்பாடான திட்டமொன்றில் ஏற்படும் ஓர் இயக்கம் சரியான பயிற்சியும், நிலைவரமான ஒழுங்கும் இன்றி செல்லுமாயின் நிச்சயம் வெற்றியடையவே முடியாது.

வாலிப இயக்கத்திற்கென்று மட்டும் இந்த வார்த்தையும், வரம்புமென எண்ணி விடவேண்டாம். தேசத்தில் எந்த நோக்கத்தைக் கொண்டு எவ்விஷயம் ஆரம்பிக்கப்பட்டபோதிலும், ஒழுங்கும், முறையும் இது தான். சுயேச்சை பெற்ற நாடுகளின் சரித்திரங்களைக் கவனிப்பவர்க்கு நான் மேலே கூறிய உண்மை எளிதில் விளங்கும். சுதந்தரம் பெற்ற நாட்டார் எவ்வளவுக்கெவ்வளவு தங்களுக்குள் கட்டுப்பாடான திட்டத்தை ஏற்படுத்திக்கொண்டு அதனை மீறாது உழைத்தார்களோ, அவ்வளவுக்கவ்வளவு சீக்கிரத்தில் வெற்றி அடைந்தார்களென சரித்திரங்கள் கூறுகின்றன. இதற்காகப் பலாத்காரமான முறையில் செல்லுவது சில சமயங்களில் அபாயமாகவே முடியும்.

அமெரிக்கா தேசமானது சுயேச்சை பெறுவதெனத் தீர்மானித்துப் போராடுகையில், ஜெனரல் வாஷிங்டனும், அவருடைய சகாக்களும், நான் முன்னர் கூறிய முறைகளையே கையாடினார்கள். அத்தேசத்தைச் சேர்ந்த 13 சமஸ்தானங்களுக்குள் சரியான கட்டுப்பாடான திட்டத்தை ஏற்படுத்திக்கொண்டு வெற்றிபெறக் கூடிய உருவகமான முறையில் உழைக்க ஆரம்பித்தனர். சாமார்த்தியமாகவும், யுக்தாயுக்தங்களை அனுசரித்தும், முறையுடன் யுத்தம் புரிந்தமையால் தங்கள் காரியத்தில் வெற்றி பெற்றார்கள். சுயேச்சை அடைந்தனர். அயர்லந்தின் விடுதலையைப்பற்றியும் நாம் சிறிது கவனிக்க வேண்டும். அயர்லாந்து வாசிகள் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் ஆட்சி முறையை வெறுத்த பின், தாங்கள் விடுதலை பெறுவதற்கு தீரம், ஒழுங்கு, விவேகம் முதலியவைகளை தங்கள் கட்டுத்திட்டத்தில் ஜாக்கிரதையாகக் கொண்டு உழைத்ததின் பயனாக வெற்றி பெற்றனர். இத்தலி தேசத்தை எடுத்துக் கொள்வோம். கரிபால்டி, மஸினி போன்ற வீரப்பெரியோர்களால் ஸ்தாபிக்கப்பட்ட “வாலிப சங்கங்கள்” அந்நாட்டுக்குப் புத்துயிரளிக்கக் கூடிய பெருமையைப் பெற்றிருந்தன. ஆஸ்டிரியாவுடன் அவர்கள் போர் புரிந்ததில், இத்தலிக்கு வெற்றி யேற்படக் காரணமாயிருந்தது, சரியான முறையில் அமைக்கப்பட்ட வாலிப சங்கங்களேயாகும். ருஷியாவில் ஸாரின் கொடுங்கோன்மையைத் தொலைக்க, லெனினும் அவருடைய சிநேகிதர்களும் சரியான முறையில் அமைக்கப்பட்ட சங்கங்கள் மூலமாகவே வேலை செய்து வாகைமாலை சூடினர்.

இந்தியாவிலும் சுதந்தர தாகம் ஏற்பட்டு, விடுதலைக்கென வேலைகள் பலமாகச் செய்யப்படுகிறது. சிப்பாய்க் கலகத்திற்குப் பிறகுதான், காங்கிரஸ் சபை காணப்பட்டது. சென்ற நாற்பது வருடங்களாக காங்கிரஸானது இந்தியாவின் பிரதிநிதியாக இருந்து வேலைசெய்து வருகின்றது. காங்கிரஸின் சமீப சரித்திரமே இந்நாட்டின் விடுதலைக்கென்று சரியான முறைகளை—அமைப்புகளைக் கொண்டதாகும் சுயமதிப்புடன், பிறரை எதிர்பாராமலும், அந்நியரைக் கெஞ்சி கேட்காமலும், நாமாகாவே இந்திய விடுதலையைத் தேடிக்கொள்வதென்று சமீபகாலத்திலேயே காங்கிரஸில் தீர்மானம் ஏற்பட்டது. அதற்கு அஹிம்சையே அடிப்படையாகவும் ஒப்புக்கொள்ளப்பட்டது. சுயராஜ்யம் பெறுவது இம்சை முறையிலானாலும் சரி, அஹிம்சை வழியிலானாலும் சரி, இந்த யுத்தத்தில், பயிற்சி, ஒழுங்கு சரியான திட்டம் முதலியன இருக்கவேண்டியது அவசியம். இந்த போரை செவ்வையாக நடத்துவதற்கு தொண்டர்கள் படை ஒன்று இருக்கவேண்டுமென்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுவார்கள். இந்தியாவின் விடுதலைப் போரில உதவி செய்வதற்கு அப்பேர்ப்பட்ட படை யொன்று இருக்கிறதாவென்றால் இப்போது இல்லை யென்றே கூறலாம். தொண்டர் கூட்டங்கள் ஆங்காங்கு இருக்கின்றது உண்மையே. இவர்கள் நன்கு பயிற்சி பெற்றவர்களில்லை யென்பதை வாசகர்கள் ஒப்புக்கொள்வார்களென எண்ணுகிறேன். பயிற்சிபெற்ற தேசிய தொண்டர் படை ஒன்று இத்தேசத்திற்கு அவசியமென அகில இந்திய சேவாதளத்தில் தீர்மானம் ஒன்று செய்யப்பட்டது. எனினும், அத்தீர்மானமானது வருட முழுவதும் அநுஷ்டானத்தில் கொண்டு வரப்படவில்லை. ஆங்காங்கு, சேவாதளத்தின் கிளைகள் ஏற்பட்டிருக்கின்றன, எங்கு இச்சபை ஏற்பட்டிருந்த போதிலும் சரியே, அதிலுள்ள தொண்டர் பயிற்சி பெற்றிருக்கின்றனராவென்பது தான் கேள்வி. தேச விடுதலைக்குப் பலத்த சாதனங்களாகிய, மதுவிலக்கு, தேசியக்கல்வி, ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை, கதர் அபிவிருத்தி முதலியவைகளைக் குறியாகக்கொண்டு வருட முழுவதும் வேலை செய்யப் பயிற்சி பெற்ற தொண்டர்கள் இருப்பார்களாயின், எவ்வளவோ அநுகூலம் கிடைக்குமன்றோ? ராஜீய வெளிச்சமே படாத கிராமங்கள், நமது தேசத்தில் 7,50, 500 இருக்கின்றது. இவைகளிலும் வேலை செய்ய தொண்டர்களைப் பழக்கலாமன்றோ?

அஹிம்சை முறையை அடிப்படையாகக்கொண்டு காங்கிரஸ் ஆக்ஞைக்கு எப்போதும் கீழ்படியத் தயாராயிருக்கும் ஓர் கோஷ்டி பயிற்சி பெற்றதாயில்லாவிடின் கோரிய காரியம் குறித்த காலத்தில் ஜெயமடைவது சந்தேகமேயாகும்.

இந்தியாவின் அரசியல் வேலைகளைத் தவிர, மற்றும் சில காரியங்களுக்கு ஆட்கள் தேவையாயிருக்கின்றது. காயப்பட்டோருக்கு உதவி, அனாதைகளுக்கு ஆதரவளித்தல், கூட்டங்கள் முதலியவற்றில் உதவி செய்தல் போன்ற பல பொது நன்மைக்கான விஷயங்களுக்கும் இப்பயிற்சி பெற்ற தொண்டர்களை உபயோகித்துக் கொள்ளலாம்.

தேச நன்மைக்கென்று உழைக்கும், தேசிய வாதிகள் யாவருக்கும் இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கிறேன். இத்தேசம் விடுதலையடைய வேண்டுமென, இவர்கள் இரவும் பகலும் உழைத்து, வேலை செய்கின்றனர். இவர்களுக்குப் பக்க பலமாக நின்று, அவ்வப்போது தேசிய வேலைகளைச் சிரமேற்கொண்டு வேலை செய்யக்கூடிய தொண்டர் படையின் மீதும் தங்கள் கவனத்தைச் செலுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன்.

காக்கினாடா காங்கிரசின் போது ஹிந்துஸ்தான் சேவாதளமானது ஸ்தாபிக்கப்பட்டது. அதற்குப் போதுமான ஆட்களும், பணமும் தேவை. இதன் பிரயோசனத்தைப் பெல்காம் காங்கிரசிற்கு வந்தவர்கள் கண்டு களித்தார்கள். இன்னும் அதிக உதவி கிடைக்குமாயின் இப்படையை எங்கும் பலப்படுத்தி, தேச வேலையைச் செய்ய உத்தேசித்திருக்கிறேன்.

---

# இந்திய ஸ்திரீகள்

இந்தியாவிலுள்ள, ஓர் குடும்பத்தில் பையன் ஒருவன் பிறந்த அன்று அக்குடும்பத்தார் ஆனந்த சந்தோஷமடைந்து கொண்டிருப்பார்கள். ஆனால், ஓர் பெண் பிறந்து விட்டாலோ அங்கு சந்தோஷமேயிராது. பையன் பிறந்துவிட்டால் ஆயிரக்கணக்காக பணங்களை செலவழித்து சந்தோஷங் கொண்டாட, பெண்குழந்தை பிறந்தால், மிகுந்த விசனப்படுவது வழக்கமாயிருக்கிறது. இதற்குக் காரணமென்னவென்பதை நாம் விவரமாக இங்கு கூறவேண்டியதில்லை. பையனானவன், அக்குடும்பத்திலேயே அவனிருந்து சகல காரியங்களும் செய்கிறான். பெண்ணோ, எப்போதயினும் சரி, பிறருடைய உரிமைக்கு ஆளாகிவிடுகின்றாள். இதை ஓர் காரணமாகக் கொண்டு, மனுஷஜென்ம மெடுத்த இவர்களுக்குள் வித்தியாசம் காண்பிப்பது சரியன்று என்பதே நமது விவாதமாகும். பெண் குழந்தைகளை வளர்ப்பதிலும், ஆண்குழந்தையை வளர்ப்பதிலும் பெற்றோர்கள் அதிக வித்தியாசம் காட்டுவதையும் நாம் காண்கிறோம். ஆண்பிள்ளைக்கு விசேஷ உரிமையும், மற்றும் சவுகரியங்களும், சுயேச்சையான இடமும் அளிக்கப்படுகின்றது. பெண்குழந்தைக்கோ இவ்விஷயங்களிலெல்லாம் குறைவுதான். அதற்கு சுயேச்சையே கிடையாது. எப்போதும் ஒருவரின் கீழ் அடங்கியே நடக்க வேண்டியதுதான். கடவுள் பெண்களை சிருஷ்டித்ததின் நோக்கமென்ன? அவர்கள் ஓர் தேசத்திற்கு எங்ஙனம் பயன் படுகிறார்களென்பதை ஆழ்ந்து யோசிப்பவர்கள் இங்ஙனம் வித்தியாசம் பாராட்டவே மாட்டார்களென உறுதியாய்க் கூறலாம். ஆண்களுக்கொரு சட்டமும் பெண்களுக்கென்று ஒரு சட்டமும் இருக்கும் வரை இத்தேசம் முன்னேற்றமடையுமாவென்பது நமது சந்தேகம்.

ஓர் பெண்ணின் தினசரி ஜீவியமானது மிகவும் பரிதாபகரமாயிருக்கிறதெனக் கூறலாம். பெரும்பான்மையான குடும்பத்தினர், பெண்களைத் தங்கள் சொத்தெனக் கருதாமல், ஏதோ சில வயது மட்டும் வளர்க்கும் பாத்தியம் பெற்றவர்களெனக் கருதுகின்றனர். ஆண்களுக்குள்ள அறிவு, சுயேச்சை மற்றும் பலவித சாதனங்கள் பெண்களுக்கும், கடவுளால் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இன்பமும், துன்பமும் இலாபமும், நஷ்டமும் யாவும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் யாதொரு வித்தியாசமின்றியே அளிக்கப் பட்டிருக்கின்றது. ஆண்களுக்கு மட்டும் சுயேச்சையான சகல உரிமைகளையும் அளித்துவிட்டு, பெண்களைத் தாழ்த்தி வைத்திருக்கும் பாவத்தினின்று நாம் என்றும் விடுதலையடையவே முடியாது. நமது மரணத்திற்குப் பிறகும் கடவுளிடம் நாம் இது விஷயமாகக் கணக்குக் கொடுக்க வேண்டி நேரிடும்.

இந்துமத விசேஷங்களிலும், அம்மதத்தைப்பொறுத்த பல சம்பிரதாயங்களிலும் பெண்கள் அதிகமாக பிரவேசிக்காதபடி தடை செய்யப் பட்டிருக்கின்றனர்.

1. ஓர் பையனுடைய பிறந்த தினத்திலோ, அல்லது அவனுக்கென்று ஓர் பெண் குறிக்கப்பட்ட தினத்திலோ (நிச்சயார்த்தம்) அந்த வீட்டில் மிகுந்த ஆடம்பரமாயிருக்கும். ஆனால், பெண்ணுக்கென்று ஆடம்பரங்கள் செய்யப்படுவதேயில்லை.

2. நமது நாட்டில் புதிய மணமக்களை ஆசீர்வதிக்கும்போது "கடவுள் உங்களுக்கு புத்திரனைக் கொடுத்து ஆசீர்வதிப்பாராக" எனக் கூறுகிறார்களேயன்றி, "பெண் குழந்தை" என்னும் பேச்சு வரவே வராது.

3. இந்து சாஸ்திரங்களையும், இந்துமத சரித்திரங்களையும் பார்ப்போமாயின், புத்திர பாக்கியமில்லாதவர்கள் புத்திரன் வேண்டுமென்றே தவம், தானம் முதலியன செய்ததாக வாசிக்கிறோம். புத்திரி கிடைக்க வேண்டுமென எவரும் பிரார்த்தனை செய்ததாகக் கூறப்படவில்லை.

4. இந்தியா தேசத்தின் சரித்திராசிரியர்களும், வித்வான்களும் மற்றும் கல்வியாளர்களும் சரித்திரங்கள் பாட்டுக்கள் முதலியன எழுதும்போது ஆண் மக்களைப் பெருமைப் படுத்தியும், பெண்மக்களைத் தாழ்த்தியும் கூறியிருக்கின்றனர். மனைவியாகப்பட்டவள், புருஷன் விஷயத்தில் இன்னின்ன கடமைகளில் தவறாது நடந்து கொள்ள வேண்டுமெனக் கூறப்பட்டிருக்கிறது எனினும், ஓர் புருஷன் தன் மனைவியின் பட்டில் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டுமென்பதைப் பற்றி விவரமாகக் கூறப்படவில்லை. இங்ஙனம் ஒவ்வொன்றிலும் பாரதூரமான வித்தியாசம் காட்டப்படும்போது ஓர் சமூகமோ அன்றி தேசமோ எப்படி விருத்தியடையும்? நம் குடும்பங்களுக்குத் தக்க ஆதரவும், அன்பும் செலுத்தி வருகின்ற தாய்மார்களுக்கும், மனைவிகளுக்கும் தக்க உரிமையும், சுதந்தரமும் அளிக்காவிட்டால் அவர்கள் எப்போதுதான் சுயேச்சையை அனுபவிக்க முடியும். இம்மாதிரி விஷயங்களிலெல்லாம் நமது கவனத்தைச் செலுத்தி, செய்ய வேண்டியதைச் செய்யாமல், "யாவும் ஈசன் செயல்" என வேதாந்தம் பேசுவது நமது மௌட்டீகத் தனத்தை அதிகப் படுத்திக் கொண்டேயிருக்குமென நாம் கூறக் கடமைப் பட்டிருக்கிறோம்.

5. விவாக விஷயத்தில் பெண்களுக்குச் சிறிதேனும் உரிமை அளிக்க நமது நாட்டார் இணங்காமலிருப்பது விசனகரமான விஷயமாகும். ஏதோ ஓர் பொருளை விலைக்கென்று பெறுவது போல மாப்பிள்ளை வீட்டுக்காரர், பெண் வீட்டாரிடம், பெண்ணை விலைக்கு வாங்குகிறார்களென்றே கூறலாம்.

6. இந்துமத தர்மமானது மிகவும் அருமையானது. அவற்றில் உள்ள பரமார்த்திகமான விஷயங்களைப் பற்றி இங்கு நாம் கூற விரும்பவில்லை. என்றாலும் அம்மதத்தின் தத்துவமானது விசால நோக்குடனும் சமதிருஷ்டியுடனும் சகல ஜீவ கோடிகளையும் பார்க்கின்றதென்பதை ஒவ்வொருவரும் ஞாபகத்திற் கொள்ளவேண்டும். இப்பேர்ப்பட்ட தத்துவமிருந்தும் அம்மதத்தைச்சார்ந்த மனுஷரில், ஆண்களை உயர்வென்றும், பெண்களைத் தாழ்வென்றும், கருதிவருவதானது, இந்து மதத்தைச் சேர்ந்த யாவருக்கும் வருத்தத்தையே கொடுக்குமென எண்ணலாம்.

7. பெண்களின் முன்னேற்றத்துக்கென யாவரும் உழைக்க வேண்டும். அவர்களுக்குச் சமத்துவத்தை அளித்து சுயேச்சை வழியில் அவர்களை நடத்திச் செல்லுதல் நன்று என எவராவது ஒருவர் இரக்கப்பட்டு வேலை செய்ய ஆரம்பிப்பாராயின் பெரும் பான்மையான ஜனங்கள் இவரை வெறுப்பான நோக்குடனேயே கவனிப்பார்கள். இங்ஙனம் செய்யக் கூடாது, பெண்களுக்குச் சமத்துவம் அளிப்பது பாவகரமான விஷயமாகும் என எவராவது பேசினால், அவருக்கு பெரும் பான்மையோரின் ஆதரவு கிடைத்து விடுகின்றது. இப்படி ஆதரவு கொடுக்கும் பெரும்பான்மையோர் பெண்கள் விஷயத்தில் இரக்கமுள்ளவர்களல்ல என்று கூறமுடியாது. ஆனால், பெண்களின் முன்னேற்றத்தை இவர்கள் விரும்புகின்றவர்களல்ல என்பது உறுதி. இவர்கள் தங்கள் வீட்டில் வளர்க்கப்படும் மிருகங்களுக்கு சுயேச்சையை அளிப்பார்கள். ஆனால் பெண்களுக்கோ சுயேச்சையை அளிக்க முன் வரமாட்டார்கள்.

8. சிசுவை அழித்தலானது சட்டபூர்வமாகத் தடுக்கப்பட்டிருக்கின்றது. அஃது ஓர் பாதகச்செயலானபடியால் இவ்வித சட்டமிருக்க வேண்டியதும் நியாயமேயாகும். ஆனால சட்டமிருப்பதினாலேயே இக்கொடுமை முற்றிலும் ஒழிந்து போயிருக்கின்றதாவென்பதை அறிஞர்கள் கவனிக்கும்படி கோருகிறோம். எத்தனையோ இடங்களில் இரகசியமாக வேனும், இச்செயல் நடவாமல் இருக்கின்றதா? பெண்கள் சமூகத்திற்கு சிறிதேனும் சுயேச்சை கொடுக்கப்படுமாயின் இவைகளெல்லாம் நிகழாதென்று உறுதியாய்க் கூறலாம்.

9. அநேக குடும்பங்களில் புருஷர்கள் தங்கள் மனைவிமார்களை தங்கள் காலின் செருப்புகளென எண்ணி, அவ்வளவு தூரம் அடிமைகளாகப் நடத்தி வருகின்றனர். இதை கொடூரமான முறையென்று கூறாது வேறென்ன பெயரிட்டழைப்பது?

10. நமது தேசத்தில் ஓர் குடும்பத்தில் பையனொருவன் வியாதியில் விழுந்தால், வைத்தியர்களுடைய உதவி பெரிதும் தேடப்படும். கோயில்களில் அர்ச்சனைகள் பெறும். அவன் சுகமடையும் பொருட்டு தர்மங்களும் செய்யப்படும். ஆனால் பெண் வியாதியாக இருந்தாலோ, இவ்வளவு சிரத்தை கொள்ளுவதில்லை. இதை சமதிருஷ்டியென்று கூறலாமா?

11. ஏதாவது சில வேளைகளில் குடும்பங்களுக்குக் குடும்பம் மனஸ்தாபம் நேர்ந்துகொண்டால், அக்குடும்பங்களிலுள்ள ஆண்களைப்பற்றி எதுவும் பேசாமல், பெண்கள் விஷயத்தைப்பற்றி எடுப்பாகவும், முறையற்ற விதமாகவும் பேசுவது வழக்கம்.

12. போஜன விஷயத்திலும் கூட ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தியாசம் காட்டப்படுகின்றது. பெண்ணானவள், ஆண் மகனைப்பார்க்கிலும் அதிக உழைப்பும், முயற்சியுள்ளவளாயிருந்தாலும் கூட, அவள் நன்ராகப் போஷிக்கப்படுவதில்லை. இதுவும் நமது தேசத்தின் துர்பாக்கியங்களிலொன்று எனக் கூறலாம்.

நாம் மேலே காட்டியுள்ள காரணங்கள் யாவும் அநுபவத்தை ஒட்டிச் சொன்னவைகளாகும். இம்மாதிரி பெண்களைச் சகல விஷயத்திலும் தாழ்த்தி வைத்திருப்பதன் காரணத்தாலேயே அவர்கள் பலவாறு இம்சிக்கப்படுகின்றனர். உள்ளே ஆழ்ந்து நோக்குவோமாயின, இந்திய பெண்கள் கொரோமான நிலைமையிலிருக்கின்றார்களென்பதே உண்மை.

சில மேலான நல்ல குடும்பங்களில் பெண்களுக்கு சுயேச்சை கொடுக்கப்பட்டிருக்கின்றது. இத்தகைய குடும்பங்களில் உள்ள சந்தோஷத்தையும், நல்வாழ்வையும் நாம இந்த வியாசத்தில் கூறிவிட முடியாது.

இதை வாசிக்கும் ஒவ்வொருவரும் இனியேனும் நமது பெண்களின் நிலைமையைப்பற்றி நன்ராய் யோசிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம். இந்தியாவில் சமூக முன்னேற்றம அவசியமானால், அதில் பிரதானமாகக் கவனிக்கவேண்டியது, பெண்களின் சமூக முன்னேற்றமேயாம். பெண்களைத் தாழ்த்தப்பட்ட நிலைமையில் நாம் வைத்திருக்குமட்டும், ஆண்கள் முன்னேற்றமடைந்தவர்களென கூறுதல், ஊற்றுக்கு நில்லாத விவாதம் தான்.

ஆகையால், பரத கண்டத்தின் முன்னேற்றத்தை விரும்பும் பெரியோர் இது விஷயத்தில் தங்கள் கவனத்தையும் செலுத்துவார்களாக.

பக்த ராம்,
ஜீவதாயரசாகர்,
பெரோஸ்பூர், பஞ்சாப்.

---

## அன்னதானம்.

(நவஜீவனில் அன்னதானத்தைப் பற்றி மகாத்மா எழுதுவது.)

(காசியப்பர்)

சென்ற வாரம் நான் சூரி என்னும் இடத்திற்குப் போயிருந்தேன். நான் ஏழைகளுடைய தாசன் என்று எண்ணப்படுவதால் என் வரவின் நிமித்தம் சூரியிலுள்ள பொது ஜனங்கள் ஏழைகளுக்கு அன்னமளித்தார்கள். என் வண்டி அவர்கள் மத்தியில் போய்ச்சேரும் சமயத்தையே அவர்கள் சாப்பிடும் சமயமாக வைக்கப்பட்டிருந்தது. அந்த ஸ்தலத்திற்குப் போன பின் வழியில் இரண்டு பக்கங்களிலும் பிச்சைக்காரர்களும் ஏழைகளும் போஜனம் செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் நடுவில் என்னை மோட்டார் வண்டியில் உட்காரவைத்துக் கொண்டு போனார்கள். அது சமயம் எனக்கு மிகவும் வெட்கமேறபட்டு விட்டது. என்னை அழைத்துக்கொண்டு போனவர்களை சிறுமைப் படுத்தினதாக ஏற்படுமோ என்னவோ என்கிற பயம் எனக்கு அது சமயம் ஏற்பட்டிராவிடில் கண்டிப்பாய்க் கீழே யிறங்கி ஒட்டம் பிடித்திருப்பேன். சாப்பிட்டுக் கொண்டிருக்கும் ஏழைகளின் மத்தியில் மோட்டாரில் இலங்கிக்கொண்டு இருக்கும் இவன் அவர்களின் தாசனாகக் கூடுமா? சூரியில் கூடிய ஒரு பொதுச் சபையில் இது சம்மந்தமாய் எனக்கேற்பட்ட துக்கத்தையும் வெளியிட்டேன். இதேமாதிரி காட்சியை கல்கத்தாவில் ஒரு பூர்வீக செல்வவந்தர் குடும்பத்திலும் நான் கண்டேன். அங்கே தேசபந்து ஞாபகநிதியின் பொருட்டு வசூல் செய்யப் போயிருந்தேன். இந்தக் குடும்பத்தின் மாளிகை, மார்பிள் பேலஸ் அதாவது சலவைக்கல் அரண்மனை என்கிற பெயரால் பிரசித்தி பெற்றது. அது சலவைக்கல்களினாலேயே கட்டப்பட்டது. வீடு மனோகரமாயும், பார்ப்பதற்கு வெகு அழகாகவுமிருந்தது. இந்த மாளிகையின் முன் வாசலில் சதா ஏழைகளுக்குப் பிச்சையும் சாப்பாடும் போடப்படுகிறது. இந்த உதாரகுணத்தை எனக்கு காண்பித்து என்னை சந்தோஷப்படுத்தும் பொருட்டே சந்தோஷமற்ற எண்ணத்துடன் அவர்கள போஜனம் செய்யும் சமயத்தில் அந்த வீட்டு எஜமானர்கள் என்னை அழைத்தார்கள். நானும் முன்பின் யோசிக்காமல ஒப்புக்கொண்டு போனேன். ஆனால, அவ்விடம கண்ட காக்ஷியானது நான் சூரியில அடைந்த துக்கத்தைவிட அதிகமான துக்கத்தை அடைந்தேன். சூரியைப்போல் சாப்பிடுகிறவர்கள் மத்தியில என்னை மோட்டார் வண்டியில கொண்டுபோக வில்லையானாலும், சாப்பிடுகிறவர்கள் மத்தியில் நான் போகும்போது என் பின்னால ஒரு பெரிய கூட்டம் வந்து கொண்டு சாப்பிட்டுக் கொண்டிருந்த ஏழைகள் மத்தியில் புகுந்து சாப்பிட்டவர்களையும் சாப்பாடுகளையும காலால மிதித்துக் கொண்டே வர வேண்டியதாய்ப் போய் விட்டது. கொஞ்ச நேரம் வரையிலும் சாப்பிடுகிறவர்களும் சாப்பாட்டை நிறுத்தி விட்டார்கள். அவர்களுடைய ஆத்மா என்னை மன்னித்து ஆசீர்வதித்திருக்குமே யானால் அவர்களுடைய உதாரகுணமும், பொறுமையும் மிகவும புகழத்தக்கதென்றே சொல்வேன். தூசி படிந்த நெருக்கடியான முன்வாசலின் யோக்கியதையென்ன. பனிக்கட்டியைபபோல் வெள்ளையான உயர்ந்த மாளிகையின் அந்தஸ்தென்ன. இந்த மாளிகையானது அந்த ஏழைகளை பரிகசிப்பது போல் எனக்குத் தோன்றியதோடல்லாமல் இவர்கள் மத்தியில் மிதிபடும்படி நான் நடந்து போனது அந்தப் பரிகாசத்தில் நானும் பங்கு கொண்டவனாகத் தோன்றிற்று. இப்பேர்ப்பட்ட அன்னதானங்கள் புண்ணியத்தைக் கொடுக்கக் கூடியதாகுமா? இதைப் பற்றி எவ்வளவு பரிசுத்தமான மனதுடன் யோசனை செய்ய பார்த்தாலும் இம்மாதிரியான அன்னதானங்கள் யோசனை இல்லாமலும் அஞ்ஞானத்தோடு அறிவில்லாமலும் செய்யும் பாவமாகவே காணப்படுகிறது. இவ்வித அஞ்ஞான தர்மங்கள் தேசத்தில் அநேக இடங்களில் நடை பெறுகின்றன. இதனால் ஏழைகள் சோம்பேறிகளாகவும் பாஷாண்டிகளாகவும் அயோக்கியர்களாகவும் திருடர்களாகவும் ஆகி இவர்களுடைய எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகப்படவும் செய்கிறது. இவ்வித தர்மங்களெல்லாம் கெடுதலாகவே முடிகிறது. செல்வவான்கள் தங்களுடைய தானத்திற்கும் தர்மத்திற்கும் தகுந்த பாத்திரத்தை விஜாரிக்க வேண்டும். எல்லாவித தானமும் தருமமும் புண்ணியமாகாது. யாருக்கு வேண்டுமானாலும் செய்வதென்பதும் புண்ணியமாகாது. கூன் குருடு நொண்டி, ரோகி முதலியவர்களுக்கு அவசியம் பிச்சையிட வேண்டும்.


அவர்களுக்கு அன்னமிடுவதில் விவேகத்தினால் வேலையும் வாங்கவேண்டும். ஆயிரக்கணக்கான ஜனங்கள் அசக்தர்களாகக் காணப்பட்டாலும், அவர்களுக்கு வேலை செய்தாலல்லாது சாப்பாடு போடக்கூடாது. அவர்கள் சாப்பிடும் இடம் தனிமையானதாகவும் சந்தடியற்றதாகவும் சுத்தமாகவும் இருக்கவேண்டும். கூன், குருடு, நொண்டி, ரோகி, இப்பேர்ப்பட்டவர்களுக்குத் தனியான விடுதிகளிருக்க வேண்டும். இந்தியாவில்இப்படிப்பட்ட விடுதிகள பல இருக்கின்றன. அப்படிப் பட்டவர்களுக்கு அன்னமிடும் உதார குணமுள்ள ஜனங்கள் இப்படிப்பட்ட விடுதிகளுக்கு உதவ வேண்டும். அல்லது தங்கள் சக்திக்குத் தகுந்தபடி விடுதிகளில்லாத இடத்தில் விடுதிகள் அமைக்க வேண்டும். உணவுக்கு வழியற்ற ஏழைகளுக்கு ஒரு தொழில தேடிக் கொடுப்பதுதான், அன்னதானமும் புண்ணியமுமே தவிர, அவர்களுக்குப் பொங்கிப் போடுவதினால் அன்னதானத்தின் பலனில்லாமல் போவதோடு பாவமும் ஏற்படுகிறது. லக்ஷக்கணக்கான ஜனங்களுக்கு அன்னதானம் செய்யவேண்டுமானால் ராட்டினத்தை நல்லறச் செய்ய வேண்டியதுதான் சிறந்த அன்னதானமாகும்.

இந்தி நவ ஜீவன்.

---

## பத்திரிகையும் பத்திரி காசிரியனும்.

பத்திரிகை வாசிக்கும் நண்பர்களுள் ஒரு சாரார் தங்களுடைய சொந்த நன்மையின் பொருட்டுப் பத்திரிகையை வரவழைப்பதாக நினைப்பதில்லை. பத்திரிகாசிரியன் எத்தனையோ கஷ்டத்துடனும் தாரித்திரியத்துடனும பொறுமையாய்ப் பொறுக்கியெடுக்கும் விஷயங்களினால் தமக்குண்டாகும் பயனை அன்னவர் ஒரு பொருட்டா பெண்ணுவதில்லை. ஏதோ தாங்கள் ஒரு பத்திரிகைக்குப் பணங்கட்டி விட்டால அத



# குடி அரசு.

அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துள்ளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குரோதன-ஹூ ஐப்பசி-மீ உ-உ

## தென் ஆப்பிரிக்கா தினம்.

தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்களைத் தாழ்வாய் நடத்துவதைப்பற்றியும், இந்தியர்களை அந்நாட்டை விட்டு ஒழிப்பதற்கென ஏற்படுத்திய சட்டத்தைப் பற்றியும், சென்ற 11-ந் தேதி இந்தியா வெங்கும் பொது தினமாகக் கொண்டாடி, தேசமெங்கும் கண்டனத் தீர்மானங்கள் நடைபெற்றன. அக்கண்டன விஷயத்தில் நாமும் கலந்து கொள்ளுகிறோம். ஆனால், நமது நாட்டில் கோடிக்கணக்கான சகோதரர்களைத் தீண்டாதாரென்றும், பார்க்கக் கூடாதாரென்றும், தங்களுடைய வேதங்களையே படிக்கக் கூடாதாரென்றும், தங்களுடைய தெய்வங்களையே கண்டு வணங்கக் கூடாதென்றும் கொடுமை செய்திருக்கிற ஒரு நாட்டார் இக்கண்டனத் தீர்மானம் செய்வதில் ஏதாவது பலன் உண்டாகுமா? இதை யறிந்த தென்னாப்பிரிக்கா வெள்ளையர்கள் இக்கண்டனத் தீர்மானங்களை மதிப்பார்களா? அல்லது குப்பைத் தொட்டியில் போடுவார்களா? என்பதை வாசகர்களே கவனித்துப் பார்த்தால் வீணாக ஓர் நாளை இப்போலிக் கண்டனத் தீர்மானங்களுக்காக பாழாக்கினோமே யென்ற முடிவுக்குத்தான் வருவார்கள்.

## அம்பலத்து அதிசயம்.

(தேசீய பிராமணர்களின் கண்டனம்.)

தேசவிடுதலை விஷயத்தில், பிராமணரல்லாதார் பொது நன்மையை உத்தேசித்து, அநேக பிராமணர்களுடைய, கொடுமைகளையும், சூழ்ச்சிகளையும் கூட்டாக்காமல் கபடமற்று பிராமணர்களுடன் ஒத்துழைத்து வந்திருந்தாலும், அவர்களுடைய உழைப்பை யெல்லாம் தாங்கள், தங்கள் வகுப்புச் சுயநலத்திற்கென்று அநுபவித்துக் கொள்வதல்லாமல், உழைக்கின்ற பிராமணரல்லாதாருக்கு, எவ்வளவு கெடுதிகளையும், துரோகங்களையும் செய்து வந்திருக்கின்றார்களென்பதை—செய்து வருகின்றார்களென்பதை பொறுமையோடு, படித்து அறிய வேண்டுமாய்க் கோருகிறோம்.

முதலாவது, பழையகாலத்திய தேசீய வாதிகளில் சிறந்தவர்களில் ஸர். சி. சங்கரன் நாயர் என்கிற பிராமணரல்லாதார் முக்கியமானவர் ஆவார். அவர் காங்கிரஸிலும் தலைமை வகித்தவர். அப்பேர்ப்பட்டவரை முன்னுக்கு வர வொட்டாமல் தடுப்பதற்காகப் பிராமணர்கள் எவ்வளவோ சூழ்ச்சிகள் செய்து வந்தார்கள். அவருக்குக் கிடைக்கவிருந்த ஹைக்கோர்ட் ஜட்ஜ் பதவியைக் கிடைக்க வொட்டாதபடிக்குச் செய்ய எவ்வித பொதுநலத்திலும் தலையிட்டிராத, ஸர். வி. பாஷ்யம் ஐயங்கார் போன்றவர்களும், மற்றும் அநேக பிராமண வக்கீல்களும் சீமைக்கெல்லாம் தந்தி கொடுத்ததோடல்லாமல், அவர் பேரில் எவ்வளவோ பழிகளை யெல்லாம் சுமத்திக் கஷ்டப்படுத்தினார்கள். அதன் காரணமாக நான்கு, ஐந்து வருடங்களுக்கு முன்னதாகவே கிடைக்கவேண்டிய ஹைக்கோர்ட் ஜட்ஜ் பதவி வெகு காலம் பொறுத்துத் தான் கிடைத்தது. டாக்டர் டி. எம். நாயர் அக்காலத்திய தேசீய வாதிகளில் மிகவும் முக்கியமான பிராமணரல்லாத தேசீய வாதி. அவர் எவ்வளவோ பொதுக் காரியங்களில் ஈடுபட்டிருந்தவர். அவரையும், மைலாப்பூர் பிராமணர்கள் ஓர் முனிசிபாலிட்டியில் கூட அவர் உட்காருவதைப் பொறுக்காமல், அவருக்கு விரோதமாக சூழ்ச்சிகளைச் செய்து அவரையும் உபத்திரவப் படுத்தினார்கள். ஜஸ்டிஸ் கட்சி ஏற்படுத்துவதற்கு நமது நாட்டில் ஏற்பட்ட முக்கியமான காரணங்களில் இவையிரண்டும் முதன்மை யானதென்று ஓர் காங்கிரஸ் பிராமண பிரசிடெண்டே நம்மிடம் சொல்லியிருக்கிறார். இவ்விதமான கஷ்டங்களிலிருந்து பிராமணரல்லாதாரைக் காப்பாற்றுவதற்காக வேண்டி முக்கிய காங்கிரஸ் வாதிகளாயிருந்த டாக்டர், நாயர் போன்ற பிராமணரல்லாத தலைவர்களால், ஜஸ்டிஸ் கட்சியென்று ஓர் ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது. அதை ஒழிப்பதற்காகப் பிராமணர்கள் சூழ்ச்சி செய்து அதற்கு எதிரிடையாக பிராமணரல்லாதார் சிலரைப் பிடித்தே சென்னை மாகாணச் சங்க மென்று ஒன்றை ஆரம்பிக்கச் செய்து அதற்கு வேண்டிய பொருளத்தனையும் பெரும்பான்மையாகப் பிராமணரே உதவி, "தேசபக்தன்" என்ற தமிழ் தினசரி பத்திரிகையையும் "இந்தியன் பேட்ரியட்" என்ற ஆங்கிலத் தினசரிப் பத்திரிக்கையையும், ஜஸ்டிஸ் கட்சியைக் கொல்லுவதற்காகவே பிரசாரம் செய்யும் பொருட்டு, ஏற்பாடு செய்து கொடுத்து, ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களுக்கும், ஜஸ்டிஸ் கட்சிக்கும் செல்வாக்கில்லாமல் அடித்தார்கள். "இந்தியன் பேட்ரியட்" பத்திரிக்கையை தாங்கள் வேலையை முடித்துக் கொண்டவுடனே ஒழித்து விட்டார்கள். எஞ்சியிருந்த "தேசபக்தன்" பத்திரிக்கையை, தேசத்தில் அதற்குக் கொஞ்சம் செல்வாக்கு ஆரம்பித்தவுடனே, அதில், ஸ்ரீமான். கலியாணசுந்தர முதலியார் ஆசிரியராயிருப்பதை ஒழிக்க வேண்டுமென்னும் முக்கிய கருத்துடன் அவருக்கு விரோதமாகச் சில பிராமணரல்லாதாரையே கிளப்பி விட்டு சில பிராமணர்களும் இரகசியமாக, அப்பத்திரிக்கைக்கு விரோதமாகத் தமிழ்நாட்டில் பிரசாரம் செய்து, ஸ்ரீமான். முதலியாரவர்களை "தேசபக்தனை" விட்டு ஓடிப் போகும்படியாகச் செய்து விட்டார்கள். அதற்குப்பிறகு, அப்பத்திரிகைக்கு பிராமணர்களே ஆசிரியர்களும், எஜமானர்களுமாகி மெதுவாக நழுவ விட்டுக்கொண்டார்கள். இதேமாதிரியே சென்னைமாகாண சங்கத்திலும், பிராமணர்களின் சொற்படி நடந்து கொண்டிருந்த சிலர் ஆதிக்கம் பெற்றிருந்ததை ஆதாரமாக வைத்து அவர்களைக் கொண்டே தங்கள் காரியமெல்லாம் முடிந்து போனவுடன் மறையும்படி செய்துவிட்டார்கள்.

இவையெல்லாம் பழைய காங்கிரஸின் கொள்கைப்படி ஏற்பட்ட திருவிளையாடல்களென்றாலும், ஒத்துழையாமை ஏற்பட்ட காலத்தில் பிராமணரல்லாத தேசபக்தர்களுக்குச் செய்த கொடுமைகளில் சிலவற்றைக் கீழே குறிக்கிறோம்.—

ஒத்துழையாமை ஆரம்பிப்பதற்குக் கொஞ்ச நாளைக்கு முன்பதாக சென்னையில் தேசீய வாதிகளின் சங்கமொன்று (Nationalist's Association) என்று ஒன்றை ஆரம்பித்தார்கள். அதற்கு ஸ்ரீமான். சி. விஜயராகவாச்சாரியார் அவர்களை அக்கிராசனராகவைத்து, உப. அக்ராசன ஸ்தானத்துக்கு ஸ்ரீமான். வி. ஓ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் பெயரைப் பிரேரேபித்தவுடன், அவருக்கு அந்த ஸ்தானத்தைக் கொடுக்க இஷ்டமில்லாதவர்களாகி அதை அவர் அடையவிடாமற் செய்வதற்கு எவ்வளவோ பிரயத்தனங்கள பிராமணர்கள் செய்தார்கள். இதை பிராமணரல்லாதாரில் சிலர் தெரிந்து அப்போதே கூச்சல் போட்டதின் பலனாக அநேக உப. அக்ராசனாதிபதிகளை ஏற்பாடு செய்து அந்த ஸ்தானத்திற்கு ஒரு மதிப்பில்லாமல் அடிக்கப் பார்த்தார்கள். இதன் பலனாக, அதன் நிர்வாக சபைகளில் பிராமணரல்லாதாரை அதிகமாகப் போடும்படி நேரிட்டது. இதன் காரணமாக தேசீய வாதிகளின் சங்கமென்பதைக் குழந்தைப் பருவத்திலேயே கழுத்தைத் திருகிக் கொன்று போட்டார்கள். பிறகு, திருப்பூரில் கூடிய தமிழ்நாடு மாகாண கான்பரன்ஸுக்கு ஸ்ரீமான் வரதராஜலு நாயுடு அவர்களை அக்ராசனம் வகிக்க வேண்டுமென்று சிலர் பிரேரேபித்தார்கள். அதற்கு விரோதமாக ஹிந்து, சுதேசமித்திரன், சுயராஜ்யா ஆகிய மூன்று பத்திரிகைகளும், அது சமயம் நாயுடு அவர்கள் கான்பரன்சில் தலைமை வகிக்கத் தகுதியற்றவரென்று எழுதி வந்ததோடு பிரேரேபித்தவருக்கும், இம்மாதிரி பிரேரேபித்தது தப்பிதமென்று சொல்லியும், அநேக ஜில்லாக்கள் பெரும்பான்மையாய் ஸ்ரீமான். வரதராஜலு நாயுடுவையே தெரிந்தெடுத்திருந்தும், ஸ்ரீமான். ஆதிநாராயண செட்டியாரவர்களைக் கொண்டும், ஸ்ரீமான். எ. ரங்கசாமி ஐயங்கார் திருப்பூருக்குச் சென்றதின் பலனையும், உபசாரணைக் கமிட்டியாரை வசப்படுத்தி இவருடைய

தேர்தலை ஒப்புக்கொள்ளாமல் நிராகரிக்கும்படி செய்துவிட்டார்கள். பிறகு மாகாண காங்கிரஸ் கமிட்டியார் பிரவேசித்து அவரை ஒப்புக்கொள்ளவேண்டுமென்று, தங்களுடைய அதிகாரத்தைக் கொண்டு நிர்ப்பந்தப்படுத்தின இன்பேரில் சுயமரியாதையுள்ளவர் ஒப்புக்கொள்ள முடியாதவாறு உள்ள ஓர் தீர்மானத்தைப் போட்டு, அவரையே ஒப்புக்கொண்ட மாதிரியாய் தெரியப்படுத்தினார்கள். இத்தீர்மானத்தின் போக்கு யோக்கியதையற்றதாயிருந்தபடியால் ஸ்ரீமான் நாயுடு அதைத் தமக்கு வேண்டாமென நிராகரிக்கும்படியாயிற்று. பிறகு, திடீரென்று ஸ்ரீமான் எம். ஜி. வாசுதேவய்யரவர்களைக் கொண்டு அம்மகாநாட்டை நடத்திக்கொண்டார்கள்.

அதற்கு அடுத்தாற்போல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு அக்ராசனாதிபதியாக பெரும்பான்மையோரால் ஸ்ரீமான். ஈ.வெ. இராமசாமி நாயக்கர் அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டபோது, தெரிந்தெடுத்த ஒரு மணி நேரத்திற்குள் ஸ்ரீமான். வ. வெ. சு. ஐயரவர்கள் "நம்பிக்கையில்லை." என்னும் தீர்மானம் கொண்டு வந்தார்கள். அந்த சமயத்தில், ஸ்ரீமான் கலியாண சுந்தர முதலியாரிருந்து, இது ராஜீய நோக்கத்துடன் கொண்டுவந்த தீர்மானமல்லவென்றும், அது ஓர் பிராமணரல்லாதார் இந்த ஸ்தானம் பெறுவதை எப்படியாவது ஒழிக்க வேண்டுமென்கிற வகுப்புத்துவேஷத்தின் மேல் கொண்டுவந்ததென்றும், பொருள்பட உக்ரமாய் அப்பொழுதே பேசியிருக்கிறார்.

இத்தீர்மானம் ஸ்ரீமான் வ. வெ. சு. ஐயர் கொண்டுவந்ததின் பலனாய், சில நாட்களுக்குள் ஸ்ரீமான். என். ஸ்ரீனிவாசய்யங்காரால் ஷை ஐயரவர்களுக்கு குருகுலத்திற்கென்று ரூ. 500 நன்கொடை அளிக்கப்பட்டது.

இவ்வருஷம் காஞ்சீபுரத்தில் நடக்கப்போகும் தமிழ் மாகாண மகாநாட்டிற்கு ஸ்ரீமான். கலியாண சுந்தர முதலியாரை, சில ஜில்லா கமிட்டிகள் தெரிந்தெடுத்திருந்தும், அதை வெளியாருக்குத் தெரிவிக்காமல் இரகசியமாய் வைத்துக்கொண்டு தங்களுக்கு வேண்டியவர்களுக்கு ஆகும்படி இரகசிய பிரசாரங்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்கு முன்னெல்லாம் யார் யாரை எந்தெந்த ஜில்லாக்கள் தெரிந்தெடுத்தன வென்பது பத்திரிக்கைகளில் வருவது வழக்கம். இப்பொழுது உபசாரணைக் கமிட்டியாரும் தெரிவிக்காமல் பத்திரிக்கைக் காரர்களும் தெரிவிக்காமல் இரகசியமாக வைக்கப்பட்டிருக்கிறது. தவிர, கும்பகோணம் காங்கிரஸ் கமிட்டி ஸ்ரீமான். வரதராஜலு நாயுடு தமது காங்கிரஸ் கமிட்டி தலைவர் பதவியை இராஜிநாமாச் செய்யவேண்டுமென்று தீர்மானமொன்று செய்திருக்கிறது. சென்னை காங்கிரஸ் கமிட்டி ஸ்ரீமான்கள். ஈ. வெ. இராமசாமி நாயக்கரையும், சுரேந்திரநாத் ஆரியாவையும் கண்டித்து ஓர் தீர்மானம் செய்திருக்கிறது. நன்னிலம் பொதுக் கூட்டத்தில் ஸ்ரீமான்கள். ஈ. வெ. இராமசாமி நாயக்கர், கலியாண சுந்தர முதலியார், ஆரியா இவர்களைக் காங்கிரசினின்று வெளியாக்க வேண்டுமென ஸ்ரீமான். ஸ்ரீனிவாசய்யங்கார் பேசியிருக்கிறார். சட்ட சபையில் காங்கிரஸ் பிராமண மெம்பர்களுடைய வேலை, பிராமணரல்லாதாருடைய ஆதிக்கத்தை ஒழிக்க வேண்டுமென்பதும், பிராமணரல்லாதாருக்கு எதிரிடையாய் நிற்கவேண்டுமென்பதுமே யென்று சட்ட சபையில் எலெக்ஷன் ஆனவுடனேயே "சுதேசமித்திரன்" பத்திரிகை எழுதியுமிருக்கிறது. சட்ட சபையில் ஒரு பிராமணர் எங்களுக்கு உத்தியோகம் கொடுக்காவிட்டால், ஒத்துழையாமைக் கக்ஷியில் சேர்ந்து விடுவோமென சர்க்காரை மிரட்டியிருக்கிறார். அன்றி, வைக்கம் சத்தியாக்கிரகத்தின் மூலமாய் அடைந்த தண்டனையிலிருந்து ஸ்ரீமான், ஈ. வெ. இராமசாமி நாயக்கர் விடுதலையாகி தமிழ் நாட்டுக்கு வந்தவுடன், மறுபடியும் வைக்கம் போகாமலிருப்பதற்காக வேண்டி, ஓர் பிராமண சட்ட மெம்பரையும், ஓர் பிராமண அட்வோகேட் ஜெனரலையும் கொண்ட கவர்ன்மெண்டு எட்டு, ஒன்பது மாதங்களுக்கு முன்னால் பேசிய பழைய குப்பைகளை ஆதாரமாக வைத்து ராஜத்துரோக முதலிய கேஸ் எடுத்து அதன் மூலமாகக் கைதியாக்கிக் கொண்டுபோனார்கள். பிராமணர்களின் பொல்லாத வேளையாய் ஓர் பிராமணரல்லாத மேஜிஸ்திரேட்டிடம் அந்தக் கேஸ் நடந்தபடியால், கேஸ் ஒன்றும் ருஜுவாக வில்லையென்றும், அவர் கேசை முடித்து தண்டிக்காமல் திருப்பி ஓட்டி விட்டார். இவ்வளவுமல்லாமல், பிராமணரல்லாத மந்திரிகள் பெரிய உத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்குகிறார்கள். லஞ்சம் வாங்குகிறவர்கள் அது செய்கிறார்கள், இது செய்கிறார்களென்று கிராமம் கிராமமாய் ஊர் ஊராய் பிரசாரம் செய்வதற்குப் பணம் செலவு செய்து ஆட்களை ஏற்படுத்தி பிரசாரம் செய்து அவர்கள் பேரில் தப்பபிப்ராயத்தைக் கற்பித்து வருகிறார்கள்.

குருகுலம் சம்மந்தமாய் நடந்த மீட்டிங்குகளில், பிராமணர்கள் கல்லெடுத்துப் போட்டார்கள். சென்னைக் கார்ப்பொரேஷன் தேர்தல்களில், ஸ்ரீமான். ஆரியாவை ஆட்களை விட்டு அடித்தார்கள். பொதுவாய் ஏழைகளுக்கும், முக்கியமாய் பிராமணரல்லாதார்களுக்கும், அவசியமானதாகிய மதுவிலக்கு, தீண்டாமை, முதலிய திட்டங்களைக் காங்கிரசை விட்டு ஓட்டி விட்டார்கள். போதாக்குறைக்குக் கதரும் காங்கிரசில் இருக்கக் கூடாதென்று, பூனா பிராமணப் பத்திரிகைகள் இப்போதே எழுத ஆரம்பித்து விட்டன. இதைப்பற்றி சென்ற வாரமே "குடி அரசில்" ஜோசியம் கூறப்பட்டிருக்கிறது.

பிராமணரல்லாதார் தெய்வத்தின் பேராலும், க்ஷேத்திரங்களின் பேராலும் காணிக்கை, வேண்டுதல் மூலமாகக் கொடுக்கின்ற பணங்கள் ஒழுங்கான வழியில் செலவழிப்பதற்காக ஏற்பட்ட தேவஸ்தான ஆக்ட்டானது, பிராமணர்களுடைய எவ்வளவோ எதிர்ப்புகளுக்கும், கண்டனங்களுக்கும் தப்பி நிறைவேறி விட்டபடியினால், இப்போது அந்த ஆக்ட்டே செல்லாதென்றும், அதை எடுத்துவிட வேண்டுமென்றும், அதை இப்போது அமுலில்லாமல் சஸ்பெண்டு செய்வதற்கு இன்சக்ஷன் தடை கோரி ஹைக்கோர்ட்டில் மகந்துக்கள் பேரால் வியாஜ்யம் தொடுத்திருக்கின்றார்கள். இதற்கு வக்கீல்களோ, ஸ்ரீமான்கள். எஸ். ஸ்ரீனிவாசய்யங்கார், டி. ரங்கச்சாரியார். டி. ராமச்சந்திர ஐயர், மகந்து பக்கமும் இதற்கு எதிர் வக்கீலாய் ஏற்பட்டவரோ அட்வகேட் ஜெனரலான, ஸ்ரீமான். டி. ஆர் வெங்கிட்டராமண சாஸ்திரிகள் என்ற பிராமணருமே. இந்த ஆக்ட் ஒழிய வேண்டுமென ஹைகோர்ட்டில் பிராது தொடுத்திருந்தாலும் இந்த ஆக்ட்டின் மூலமாய் ஏற்பட்ட உத்தியோகங்களெல்லாம் தங்களுக்கே கிடைக்க வேண்டுமென்று, தேவஸ்தான போர்டு ஆபீசையும், மந்திரி வீடுகளையும் பிராமணர்கள் சுற்றிக்கொண்டு வருகிறார்கள்.

இவையெல்லாமிருக்க மகாத்மாவையே ஒழிப்பதற்காக "ப்ராமணன்" என்கிற ஓர் பத்திரிக்கையையும் சங்கராச்சாரியார்கள் மகந்துக்கள் முதலிய பிராமண சிரேஷ்டர்களென்போரின் ஆதரணையில் ஆரம்பித்திருக்கிறார்கள். மற்றொரு பக்கம் மகாத்மாவின் பெயரைச் சொல்லிக்கொண்டு பதவிகளையும், சட்டசபை ஸ்தானங்களையும் பெறுவதற்கு பிராமணரல்லாதரை ஏமாற்றியும், அலைந்து கொண்டுமிருக்கிறார்கள். இதற்குச் சில பிராமணரல்லாதாரையும் மிரட்டி சுவாதீனப் படுத்திக் கொண்டார்கள்.

தினசரி பத்திரிக்கைகள் தங்கள் கைகளில் இருக்கிற காரணங்களால் பாமர ஜனங்களை ஏமாற்றித் தங்கள் வசப்படுத்திக் கொள்வதோடு சில முக்கியமான பிராமணரல்லாதாரை தலையெடுக்க வொட்டாதபடி பத்திரிக்கைகளில் ஊர், பேர் தெரியாத பிராமணரல்லாதரின் பொய்ப்பெயர்களை இட்டு தூற்றுதலான விஷயங்களை எழுதுவதும் பிராமண வக்கீல்களிடம் (அப்ரென்டிஸ்) அதாவது வேலை படிக்கும் பிராமணரல்லாத வக்கீல்களான, வாலிபர்களின் கையெழுத்தைப் போடச்செய்து அவர்கள் பெயரால் பிராமணரல்லாதாரை வைது பத்திரிக்கைகளில் எழுதுவதும், வயிற்றுக்கில்லாதவர்களினுடையவும் பணத்தாசை பிடித்தவர்களினுடையவும் தேசபக்தியையும் விலைக்கு வாங்கிக்கொண்டு அவைகளை பிராமணரல்லாதருக்கு விரோதமாக உபயோகப்படுத்தி பணச் செருக்கால் செய்து வருவது, சென்னைத் தேர்தல்களிலும், மற்றத்தேர்தல்களிலும் தெரிந்து போயிருக்கிறது.

ஸ்தல ஸ்தாபனங்களில், பிராமணரல்லாதாருக்குள் கட்சிப் பிரதி கட்சிகளை உண்டாக்கி இவர்களைக் கோர்ட்டுக்குச் செல்லும்படி செய்வதும் சில பிராமணர்களே யாகும்.

தேசிய பிராமணர்கள், பிராமணரல்லாதாருக்குச் செய்துள்ள கொடுமைகள் இவ்வளவு தானென வரையறுத்து விட முடியாது. அவர்கள் செய்தவையும், இன்னும் செய்யப் போகின்றதுமான காரியங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அவைகளை சமயம் நேரும்போது வெளியிட நாம் பின் வாங்கப்போவதில்லை. இவ்வளவெல்லாமிருக்கும் போது, சென்னை காங்கிரஸ் கமிட்டியார், ஸ்ரீமான்கள், இராமசாமி நாயக்கரவர்கள் மீதும், ஆரியா அவர்கள் பேரிலும் கண்டனத் தீர்மானம் செய்திருப்பதை நாம் லக்ஷியம் செய்ய வேண்டியதில்லை என எண்ணுகிறோம்.

---

(5-வது பக்கம் தொடர்ச்சி.)

னால் அப்பத்திரிகாசிரியனுக்கு அதிகம் உபகாரம் செய்து விட்டதாய்க் கருதுகின்றனர். ஆனால் தங்களுக்குப் போஜன பதார்த்தங்களைக் கொடுத்து வரும் ரொட்டிக்காரனையும் கசாயிக்காரனையும் அவ்வாறு நினைப்பதில்லை. அந்த வியாபாரிகளுக்கு மாதக்கணக்காய்ப் பணங் கொடுக்கும்போது அதை மட்டும் தங்களுடைய சொந்த உபயோகத்திற்கென்று வாங்கிய சாமான்களின் கிரயமெனக் கருதுகின்றனர். ஆனால் ஞான ஆகாரத்தை ஊட்டும் பத்திரிகாசிரியனுக்குக் கொடுக்கும் சந்தாத் தொகையை மட்டும் அவனுடைய சொந்த உபகாரத்தின் பொருட்டு உதவியாகச் சன்மானம் அளித்ததேபோல் பாவித்துக் கொள்ளுகின்றனர்.

*

பத்திரிகை நடத்தும் விஷயம் இக்காலத்தில் எவ்வளவு கஷ்டமாயிருக்கிறதென்பது பத்திராலயங்களுக்குள் நுழைந்து பார்த்தவர்களுக்கே தெரியும். பல மனிதர்களும் ஆதரித்தால் மட்டுமே ஒரு பத்திரிகை செம்மையாய் நடைபெறும்; தனித்தனியான நண்பர்களெல்லாம் தனித்தனியே பத்திரிகைக்குப் பணம் கட்ட வருந்தும்போது அநேக மனிதர்கள் ஒன்று சேர்ந்துகொண்டு யாதேனும் ஓர் சங்கத்தை ஸ்தாபித்துக் கொண்டால் அவர்கள் பத்திரிகை வாங்கப் பணம் இல்லையென்று இனாமாக அனுப்பச் சொல்லுகிறார்கள். சங்கத்தின் அங்கத்தினர் தம்முடைய கட்டட வாடகையையும், விளையாட்டுக் கருவிகளின் கிரயத்தையும், தேக்கச்சேரியின் கூலியையும், ரொட்டிகாரருடைய கடனையும், மற்றும் பூமாலை முதலிய கொண்டாட்டச் செலவுகளையும் இனாமாக எதிர் பார்ப்பதில்லை. தனிமனிதன் ஒரு பத்திரிகையை வாங்குவதைக்காட்டிலும் சங்கத்தின் மூலம் வரவழைத்தால் நபருக்குக் கொஞ்சமாகவே சந்தா விகிதம் நேரிடும். பலபேர் சேர்ந்த ஒரு சங்கத்தார் ஒரு சஞ்சிகைக்குத் தொகை கொடுப்பதை விடுத்து இனாமாகக் கேட்பது வியசனகரமான காரியமாய்ப் புலப்படுகின்றது. இப்படிப்பட்ட நண்பர்கள் தாங்கள் ஞானம் பெறும் பொருட்டுப் பத்திரிகாசிரியனையும் ஆதரிப்பதை ஒரு முக்கிய கடமையெனக் கொள்வாராக. 25 அங்கத்தினர் தனித்தனியே சஞ்சிகை வரவழைக்காமல் அவர்களனைவரும் ஒன்று சேர்ந்து ஒரே சஞ்சிகை வரவழைப்பதினாலேயே 24 சஞ்சிகையின் நஷ்டம் பத்திரிகாசிரியனுக்கு நேருகின்றது. இது நிற்க, அந்த 25 அங்கத்தினரும் சேர்ந்த ஒரு சங்கத்தவர் ஒவ்வொரு சஞ்சிகைக்கும் சந்தாக்கொடாமல் இனாமாக எதிர்பார்ப்பது எமது அதிருஷ்டக்குறைவுமன்றோ?

தாருல் இஸ்லாம்.

---

## துத்திகுளம் நந்தனார் மடம்.

நமது தேச முன்னேற்றத்திற்கு பல விதசீர்திருத்தங்கள் வேண்டியிருக்கின்றன. ஆயினும் இவைகளில் தாழ்த்தப்பட்ட மக்களை நல்வழிப்படுத்த வேண்டியது முக்கியமாகும்.

நமது பெரியோர்கள் பசுக்களை காமதேனு என்றும் தென்னை மரங்களை கற்பக விருக்ஷமென்றும், போற்றி வந்திருக்க, தற்காலம் காமதேனுவாகிய பசுக்களைக் கொன்று தின்னவும், கற்பக விருக்ஷமென்னும் தென்னை மரத்தின் பாளைகளை நசுக்கி கள் இறக்கிக் குடித்து, வெறித்துக் கொலைக் கூத்தாடும் கொடுமைகளை நமது கண்களில் தினந்தோறும் பார்த்து யாருக்கு வந்த விருந்தோ என்பது போல கவனியாது இருப்பது கவலைக்கிடமல்லவா?

நமது இந்து மதமானது நமக்கு உயிர் போன்றது என்பது அறிந்த விஷயம். அப்படியிருக்க தாழ்த்தப்பட்ட மக்கள் உண்மை தெரியாது அன்னிய மதம் புகுந்து நமது மதத்தை இழிவு கூறுகின்றனர். இதனை அறிந்த அறிவுடைய பெரியோர்கள் தங்களால் இயன்ற பொருள் உதவி செய்தும் செய்வதாகவும், சிலர் கட்டளையிட்டதின் மேல் துத்திகுளம் கிராமம் ஆதிதிராவிடத் தெருவில் ஒரு நந்தனார் மடம் கட்டி அதில் கடவுள் வணக்கம், கல்வி, கைத்தொழில், ஒழுக்கம், தேசாபிமானம் முதலியவைகளை விருத்தி செய்யவும், மது, மாமிசம் முதலியவைகளை நீக்கவும் அடியேன் முன் வந்திருக்கிறேன். கட்டட வேலை நடந்து வருகிறது.

ஆகையால் இதைக் கண்ணுறும் கனவான்கள் தங்களாலியன்ற பொருளுதவி செய்து, வாக்கு சகாயமும் புரிந்து இந்த தர்ம கைங்கரியத்தை ஏற்றுக் கொண்டு ஏழைகளை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுகிறேன்.

ஷை உதவியினால் பல பசுக்களுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்த தர்மமும், பல கள்ளுக்கடைகளை மூடிய லாபமும் கிடைக்குமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

குறிப்பு:—சேலம் ஸ்ரீமான்கள் K. V. சுப்பராவ் வக்கீல், அவர்களும். C. அனந்தாச்சாரியார் வக்கீல், அவர்களும், டாக்டர் P. வரதராஜுலு நாயுடு, அவர்களும் பல மரச்சாமான்கள் உதவி புரிந்திருக்கின்றனர். தொகை மதிப்பு பின்னால் தெரிவித்துக் கொள்ளுகிறேன், என துத்திகுளம், ஸ்ரீ ஆர். வருதப்பன் நமக்கு எழுதுகிறார்.

---

## கதர்.

பம்பாயிலுள்ள ஆலைகள் மூடப்பட்டிருப்பதையும், அதனைச் சேர்ந்த தொழிலாளர் லக்ஷக்கணக்காக வேலையின்றி கஷ்டப்படுவதையும் யாவரும் அறிவார்கள். இதற்குக் காரணம், அந்நிய நாட்டு நூல், ஜவுளி முதலிய அதிகமாக இறக்குமதி செய்யப்படுவதும், எதிர் வரியும், முதலாளிகளின் பேராசையுமே யாகும். ஜப்பானும், இங்கிலாந்தும் 1922-ம் வருடங்களிலிருந்து 1925-ம் வருடம் ஜூன் மாதம் வரை எவ்வளவு நூலும், ஜவுளியும் இறக்குமதி செய்திருக்கின்றதென்பதைக் கீழ்கண்ட தொகையானது காட்டுகின்றது:—

### நூல் இறக்குமதி.

ஜப்பான்.

| வருஷம், | பவுண்டு. | மதிப்பு ரூ. |
|---|---|---|
| 1922-23 | 2,65.46,905. | 3,20,42,449 |
| 1923-24 | 2,04,30,025. | 2,85,17,608 |
| 1924-25 | 3,23,24,773. | 4.59.37,318 |
| 1925-ஏ-ஜூ | 1,61,60.285. | 2,01,51,444 |

இங்கிலாந்து.

| வருஷம். | பவுண்டு. | மதிப்பு ரூ. |
|---|---|---|
| 1922-23 | 3,10,18,362. | 5,69,87,686 |
| 1923-24 | 2,18,89,923. | 4.61,18,078 |
| 1924-25 | 2,07,59,078. | 4,84.97,774 |
| 1925-ஏ-ஜூ | 48,61.775. | 97,80,621. |

### ஜவுளி இறக்குமதி.

ஜப்பான்.

| வருஷம் | கெஜம் | மதிப்பு ரூ. |
|---|---|---|
| 1922-23 | 10,77,78,996. | 4,22,90,067 |
| 1923-24 | 12,26,64,674. | 4,62,70.285 |
| 1924-25 | 15.53,01,889. | 5,74,92,771 |
| 1925-ஏ-ஜூ | 6,67,68,733. | 2,22,95,598 |

இங்கிலாந்து.

| வருஷம். | கெஜம். | மதிப்பு ரூ. |
|---|---|---|
| 1922-23 | 144,06,69,319. | 51,87.73,407 |
| 1923-24 | 130,62,66,238. | 48,88,54,531 |
| 1924-25 | 159,87 38,532. | 59,75,42,105 |
| 1925-ஏ-ஜூ | 41,62,76,936. | 41,76,78,431 |

பருத்தியானது ஏராளமாக நமது நாட்டில் விளைந்தும், போதுமான தொழிலாளரும் மற்றும் சாதனங்களும் இருந்தும், அந்நிய நாடுகளிலிருந்து இவ்வளவு இறக்குமதிக்கு இன்னும் கொடுத்துக் கொண்டு வருவதானது, இந்தியர்களுக்கு அவமானமென்று கூறத்தகைமையென்ன? 1922-23 வருடத்திலிருந்து இறக்குமதியானது குறைந்து, 1924-25ல் அதிகப்பட்டு, பின்னும் 1925-ஏப்ரல், ஜூனில் இறக்குமதி குறைந்திருக்கின்றதெனினும், முற்றிலும் அந்நிய நாட்டு நூலோ, துணியோ நமது நாட்டுக்கு இறக்குமதியாகாதபடி செய்ய இந்தியர் ஒவ்வொருவரும் கடமைப்பட்டிருக்கின்றனர். இங்ஙனம் செய்ய கதரே பெருத்த சாதனமாகும். பல லக்ஷம் மனிதர்களுக்கு ஜீவனாம்சத்தை அளிக்கக் கூடியதும், இந்தியர்களின் மானத்தைக் காக்கக் கூடியதும், ஏழைப் பெண்களின் உற்ற ஆதாரவும், கற்பகத் தருவானதும் கதரேயாகும். இந்தியாவிலுள்ள சகல இடங்களிலும் கதர் பரவுமாயின் ஏழைகளின் கஷ்டத்திற்கு விடுதலை ஏற்படுமென்பதே எனது தீர்மானம், என கதராபிமானி ஒருவர் நமக்கு எழுதுகிறார்.

# நூற்போர் சங்கம்.

மகாத்மா காந்தி தமது "யங் இந்தியா" பத்திரிகையில் எழுதுவதாவது:—

நூல் நூற்றல், கதர் இவற்றின் அபிவிர்த்திக்காக ஒரு நிரந்தரமான ஸ்தாபனம் ஏற்படுத்துவதற்குக் காலம் வந்து விட்டபடியாலும், அரசியல் மாறுதல்களால் பாதிக்கப்படாத நிரந்தரமான ஒரு ஸ்தாபனமின்றி மேற்கண்ட அபிவிருத்தி ஏற்படாதென்று அநுபவத்தில் தெரிய வந்திருப்பதாலும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் சம்மதத்துடன் அகில இந்திய நூல் நூற்போர் சங்கம் என்னும் இந்த ஸ்தாபனம் அமைக்கப்படுகிறது. இது காங்கிரஸ் ஸ்தாபனத்திற்குள் ஒரு தனிப்பட்ட உறுப்பாகவும் தனி அதிகாரங்கள் படைத்ததாகவும் இருக்கும்.

இச்சங்கம் அங்கத்தினர், சகாக்கள், நன்கொடையாளர் இவர்களடங்கியதாயிருக்கும். கீழ்க்கண்ட அங்கத்தினர் அடங்கிய நிர்வாக சபை ஐந்து வருஷங்களுக்கு வேலை செய்யும்:—

க. மகாத்மா காந்தி
உ. மௌலானா ஷௌகத் அலி
ங. இராஜேந்திர பிரஸாத்
ச. சதீச சந்திரதாஸ் குப்தா
ரு. மகன்லால் கே. காந்தி
சு. ஜம்னலால் பஜாஜ் (பொக்கிஷதார்)
எ. ஷாஉவாயிப் குரேஷி } காரியதரிசிகள்
அ. சங்கர்லால் பாங்கர் } காரியதரிசிகள்
கூ. ஜவஹர்லால் நேரு } காரியதரிசிகள்

## நிர்வாக சபையின் அதிகாரங்கள்.

அகில இந்திய கதர் போர்டுக்கும், மாகாண கதர் போர்டுகளுக்கும் தற்போது சொந்தமாயுள்ள சகல சொத்துக்களையும் மேற்கண்ட நிர்வாக சபையார் எடுத்துக்கொள்வார். மேற்சொன்ன சொத்துக்களின் நிர்வாக விஷயத்தில் அவர்களுக்குப் பூரண அதிகாரம் இருக்கும். கடன் வாங்கவும் சந்தா வசூலிக்கவும், ஸ்தாவர சொத்துக்கள் வைத்துக்கொள்ளவும், கதர் அபிவிர்த்திக்காகக் கடன் நன்கொடை முதலியவை கொடுக்கவும், நூற்கக் கற்றுக் கொடுக்கப்படும் பள்ளிக்கூடங்களை நடத்தவும், உதவி செய்யவும், கதர்க்கடைகள் நடத்தவும், கதர் தொண்டர் படை ஒன்று நிர்மாணிக்கவும், காங்கிரஸின் சார்பாகக் காங்கிரஸ் அங்கத்தினரின் நூல் சந்தாவை வாங்கிக்கொண்டு அத்தாட்சிப் பத்திரம் கொடுக்கவும், சங்க நோக்கம் நிறைவேறுவதற்கான இன்னும் மற்ற எல்லாக் காரியங்களையும் செய்யவும், சங்கத்தின் தற்போதைய அமைப்பையும் விதிகளையும் உசிதம் போல் அவ்வப்போது மாற்றிக்கொள்ளவும் மேற்கண்ட நிர்வாக சபைக்கு அதிகாரம் உண்டு.

நிர்வாக சபையில் மரணத்தினாலோ மற்ற காரணங்களினாலோ ஏற்படும் காலி ஸ்தானங்களை மற்ற அங்கத்தினரே பூர்த்தி செய்து கொள்வார்கள். நிர்வாக சபைக்கு இன்னும் சில அங்கத்தினரையும் அவர்கள் சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் மொத்தம் அங்கத்தினரின் தொகை பன்னிரெண்டுக்கு மேல் போகக்கூடாது.

சந்தா நன்கொடை முதலியவற்றிற்குச் சரியான கணக்கு வைத்திருக்கவேண்டும். மூன்று மாதத்திற் கொருமுறை கணக்குகள் அதிகாரம் பெற்ற பரிசோதகர்களால் பரிசீலனை செய்யப்படும்.

## காங்கிரஸ் நூல் சந்தா.

சங்கத்தின் தலைமைக் காரியாலயம் சபர்மதி சத்தியாக்கிரஹ ஆசிரமத்தில் இருக்கும். காங்கிரஸ் நூற் சந்தா அங்கத்தினராக இருக்க விரும்புவோர் தங்கள் சந்தாவை இந்தக் காரியாலயத்துக்கு அனுப்பவேண்டும். நூலுடன் எந்தக் காங்கிரஸ் கமிட்டியில் அங்கத்தினராக இருக்க விரும்புகிறார் என்பதையும், வயது, தொழில், விலாசம், நூலின் நீளம் நிறை இந்த விவரங்களையும் தெரிவிக்கவேண்டும்.

சந்தா கிடைத்ததும் காரியதரிசி பரிசோதித்து நூல், திருப்திகரமாயிருந்தால் சம்பந்தப்பட்ட காங்கிரஸ் கமிட்டிக்கு ஓர் அத்தாட்சிப் பத்திரமும், சந்தாதாரருக்கு அதன் நகல் ஒன்றும் அனுப்பிவைப்பார்.

## சங்கத்தின் அங்கத்தினர்.

நூல் நூற்போர் சங்கத்தின் சாதாரண அங்கத்தினர் இரண்டு வகுப்பினராக இருப்பார்.

க. ஏ. வகுப்பு அங்கத்தினர் பதினெட்டு வயதிற்கு மேற்பட்டவர்களாயும், வழக்கமாகக் கதர் அணிபவர்களாயும் இருப்பதுடன், மாதாமாதம் சமமான தும், முறுக்கேறியதும், சொந்தமாய் நூற்றதுமான நூல் ஆயிரம் கஜம் பொக்கிஷதாருக்கோ அல்லது வேறு அதிகாரம் பெற்றவருக்கோ அனுப்பிவர வேண்டும். (உ) பி. வகுப்பு அங்கத்தினர் வருஷத்திற்கு 2000 கஜம நூல் அனுப்ப வேண்டும். முதல் வகுப்புக்குரிய மற்ற நிபந்தனைகளை இவர்களும் அநுசரிக்கவேண்டும். காங்கிரஸ் அங்கத்தினராவதற்காக அனுப்பும நூலும் இச்சங்கத்தின் சந்தாவின் பகுதியாகக் கருதப்படும்.

## அங்கத்தினரின் உரிமைகளும், கடமைகளும்.

நூல் நூற்றல், கதர் இவைகளைப் பரவச்செய்வதற்காகப் பிரசாரம் செய்வது இரு வகுப்பு அங்கத்தினருடையவுங் கடமையாகும். தற்போதுள்ள நிர்வாக சபையின் காலம் முடிந்த பிறகு நிர்வாக சபை அங்கத்தினரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை சங்கத்தின் அங்கத்தினருக்கு உண்டு. ஆனால் நிர்வாக சபைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஏ. வகுப்பு அங்கத்தினராயிருத்தல் வேண்டும். ஐந்து வருஷத்திற்கு பிறகு அங்கத்தினர் கூட்டங் கூடி, கூட்டத்துக்கு வந்தவர்களில் முக்கால் பங்கு அங்கத்தினரின் சம்மதத்தின்மேல் சங்க அமைப்பை மாற்றிக் கொள்ளலாம்.

எந்த மாகாணத்திலாவது 50 அங்கத்தினர் சேர்ந்து விட்டால், அவர்கள் முதல் வகுப்பு அங்கத்தினரிலிருந்து ஐந்து பேரை மாகாண ஆலோசனைக் கமிட்டியாகத் தேர்ந்தெடுக்கலாம். மாகாணத்தைப் பொறுத்த வரையில் இக்கமிட்டியார் அகில இந்திய நிர்வாக சபைக்கு யோசனை சொல்வார்கள்.

## சகாக்கள்.

வழக்கமாகக்கதர் அணிவோர் வருஷ சந்தா ரூபா பன்னிரண்டு கட்டினால் சங்கத்தின் சகாக்கள் ஆவார்கள். ஜீவிய சகாக்கள் ஆவதற்கு மொத்தமாய் ரூபா நூறு கட்டிவிட வேண்டும். சங்கத்தின் கணக்கு அறிக்கைகள் நடவடிக்கைகள் ஆகியவற்றின் நகல்கள் இவர்களுக்கு இலவசமாக அனுப்பி வைக்கப்படும்

## அங்கத்தினராக விரும்புவோர் கவனிக்க.

நூற்போர் சங்கத்தில் அங்கத்தினராக விரும்புவோர் அடியிற் கண்ட மூன்று விஷயங்களைக் கவனிக்க வேண்டுமென்று மேற்படி சங்கக் காரியதரிசிகள் தெரிவிக்கின்றனர்:—

க. கீழ்க்கண்ட நமூனாவின்படி விண்ணப்பம் செய்து கொள்ளவேண்டும்.

அகில இந்திய
நூற்போர் சங்கக் காரியதரிசிக்கு,
சபர்மதி,

ஐயா,

மேற்கண்ட சங்கத்தின் விதிகளை நான் படித்துள்ளேன். நான் இச்சங்கத்தின் ....வகுப்பு அங்கத்தினன் ஆக விரும்புகிறேன். இத்துடன்..........சந்தாவை அனுப்பியுள்ளேன். தயவு செய்து என்னை ஓர் அங்கத்தினனாகப் பதிவு செய்து கொள்ளவும்.

தங்கள்
கையெழுத்து.

உ. சந்தா நூல் நேராக சபர்மதிக்கு அனுப்பவேண்டும்.

ங. அடியிற் கண்ட விவரங்கள் அடங்கிய ஒரு சீட்டு நூலுடன் சேர்த்து அனுப்ப வேண்டும்

(க) பெயர், விலாசம், தாலுகா, மாகாணம்.

(உ) சந்தா எந்த மாதத்திற்கு?

(ங) நூலின் நீளம், நிறை, எண் ஒரு சுற்றின் நீளம், பருத்தி வகை ஆகிய விவரங்கள்.

"நவசக்தி"

---

## அகில சாத்தாத ஸ்ரீ வைஷ்ணவ 4-வது மகா நாடு.

(கோயமுத்தூர் ஜில்லா) திருப்பூர்.

சென்ற 16-7-1925-ந்தேதியன்று திருப்பூர் கான்பரன்ஸ் ஆபீஸில் நடைபெற்ற நிர்வாகக்கமிட்டியில் தீர்மானித்தபடி நாளது அக்டோபர் மாதம் 24-25 தேதிகளில் நடைபெறவேண்டிய 4-வது மகாநாட்டை பல அசந்தர்ப்பங்களை முன்னிட்டு அத்தேதிகளில் நடத்த முடியாதெனத் தெரிய வருகிறபடியாலும், நம்மவர்களிற் பெரும்பாலோர் இப்பக்கங்களிற் கடந்த பல மாதங்களாக மழையில்லாமையால் க்ஷாமகாலமேற்பட்டு வரவு குன்றி மகா நாட்டிக்குத் தனசகாயம் செய்ய முடியாத நிலைமையை யெய்தியுள்ள இக்காலத்தில் கான்பரென்ஸை நடத்தாமல் சிறிது காலம் நீட்டி வைப்பின் தற்சமயம் மழை பெய்ய வாரம்பி

இருப்பதால் கொஞ்சம் க்ஷேமகால மேற்படலாமாகையால் ஒத்தி வைக்கும் தேதிக்குள் சந்தா வகையராக்களை செலுத்தி மகா நாட்டுக்கு வருவதற்கும் சௌகர்யமாயிருக்குமெனக் கேட்டுக் கொண்டமையாலும், அடுத்த நவம்பர் மாதம் 27-28 (தமிழ் குரோதன வருஷம் கார்த்திகை மாதம் 12-13) தேதிகளாகிய வெள்ளி, சனிக்கிழமைகளில் திருப்பூரில் அரக்கோணம், எம். எஸ். எம். ரயில்வே லோகோ வொர்க்ஸ் மானேஜர் ஸ்ரீமான். டி. பி. மணவாளய்யங்காரு தலைமையின் கீழ் நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது, என மகா நாட்டுக் காரியதரிசி நமக்கு எழுதுகின்றார்.

---

## கரந்தைத் தமிழ்ச் சங்கம்,

### (பதினொன்காம் ஆண்டுவிழா.)

குரோதன ஆண்டு, ஐப்பசித் திங்கள் அ, கூ-நாட்களில (24, 25—10—25) கருந்திட்டைக்குடியில் உள்ள சங்கக் கொட்டகையில் இச்சங்கத்தின் பதினொன்காம் ஆண்டுத் திருவிழா நடை பெறும்.

அவைத் தலைவர், மகிபாலன்பட்டி, பண்டிதமணி, திருவாளர். மு. கதிரேசச் செட்டியாரவர்கள், மற்றும் பல வித்வான்கள் அரிய சொற்பொழிவு நிகழ்த்துவார்கள், என அமைச்சர் எழுதுகிறார.

---

## ஸ்ரீமான் நாயக்கர்.

ஸ்ரீமான் ஈ.வி. இராமசாமி நாயக்கரவர்கள், இம்மாதம் 11-ந்உ பாப்பாரப்பட்டிக்கு அவ்வூர் தேசபக்தர்களின் வேண்டுகோளின்படி விஜயம் செய்தார். அன்று ஓர் பெரிய கூட்டம் நடை பெற்றது. ஸ்ரீமான். வேலாயுத முதலியாரவர்கள் அக்ராசனம் வகித்தார். ஸ்ரீமான் நாயக்கர் கதர், தீண்டாமை முதலியவைகளைப் பற்றி நீண்ட நேரம் பேசினார்.

ஸ்ரீமான் நாயக்கர், பின்னர் மாரண்டஹள்ளி பார்க்கவகுல மகாநாட்டுக்குச் சென்று திரும்பு காலையில், ஸ்ரீமான் கலியாண சுந்திர முதலியாரவர்களுடன் பாலக்கோட்டுக்கு விஜயம் செய்தனர். அங்கு ஸ்ரீமான். முனிசாமி கவுண்டரவர்களின் தலைமையின் கீழ் பெரிய கூட்டம் ஒன்று நடை பெற்றது. ஸ்ரீமான். நாயக்கர் கதரைப் பற்றி பேசினார். ஸ்ரீமான் கலியாண சுந்திர முதலியாரவர்கள் கதர், தீண்டாமை முதலியவைகளைப் பற்றிப் பேசி சுயராஜ்யக் கட்சியினரால், காங்கிரசில் கக்ஷி வேற்றுமைகள் அதிகம் உண்டாகி விட்டதென்றும், இதனல் பொதுஜன வேலையானது பாதிக்கப் பட்டிருக்கின்றதென்றும், குறிப்பிட்டார், என ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## பார்க்கவகுல மகாநாடு.

மாரண்டஹள்ளியில் பார்க்கவகுல மகா ஜனங்களின் 11-வது மகாநாடு மாரண்டஹள்ளியில் இம்மாதம் 12, 13 தேதிகளில் நடை பெற்றது. அதில் விஜயம் செய்திருந்த கனவான்களில் முக்கியமானவர்கள்:— ஸ்ரீமான்கள். ராவ் சாகிப் எஸ். குழந்தைவேலு உடையார், வில்வராயநல்லூர், ச. முத்துக்குமார உடையார், சேர்ந்தமங்கலம், மிட்டாதார்கள். ஐராவத உடையார், முத்துசாமி உடையார், மே. வே. துரைசாமி உடையார், இ. வி. இராமசாமி நாயக்கர், திரு. வி. கல்யாண சுந்திர முதலியார், வி. சொக்கலிங்க உடையார், காடையாம்பட்டி, குழந்தை உடையார் முதலியோர். ஸ்ரீமான். ம. ரா. குமாரசாமி பிள்ளையவர்கள் அக்ராசனம் வகித்தார்கள். சுமார் 2000 ஜனங்கள் வரையிலும் கூடியிருந்தனர். இதில் பெண்கள் ஏராளமாக விஜயம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது. சபைத்தலைவர் தமது முகவுரையில் பார்க்கவ குலத்தாரின் தற்கால நிலைமையைப் பற்றியும, அக்குலத்தவர்களின் முற்கால மாண்பைப்பற்றியும், தற்காலம் அவர்களிருந்து வரும் தாழ்வைப்பற்றியும் விரிவாகக் கூறி, இனி அவர்கள் வருங்காலத்தில் எவ்வாறு சகல துறைகளிலும் முன்னேற்றமடைய முயல வேண்டுமென்பதைப் பற்றியும் சுமார் இரண்டு மணி நேரம் கூறினர். பின்னர், "கருணீக மித்திரன்," பத்திராதிபர், ஸ்ரீமான். சிவப்ரகாசம் பிள்ளை சைவ சமயம் என்பதைப்பற்றி ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். அதன் பின்னர், ஸ்ரீமான். திரு. வி. கலியாண சுந்திர முதலியார் இல்லறவாழ்வு என்னும் விஷயத்தை எடுத்துக்கொண்டு நீண்ட நேரம் பேசினர்கள். அப்புறம் ஸ்ரீமதி. ஞானபூங்கோதையம்மாள் விருத்த குமாரர் பாலரான படலம் என்பதைப்பற்றி தமது இன்னிசைப் பாக்களால் சபையோரை ஆனந்திக்கச் செய்தனர். இறுதியாக, ஸ்ரீமான். ஈ. வி இராமசாமி நாயக்கரவர்கள், சமரசம் என்ற தலைப்பின் கீழ் பேசும் பொழுது, பெண்களுடையவும், தாழ்ந்த வகுப்பினர்களுடையவும் தற்கால நிலைமையை எடுத்துச் சொல்லி, அவர்கள் சமத்துவத்துடன் நடத்தப்படுவதே சமரசம் என்று விரிவாக ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். இரண்டாம் நாள் முற்பகலில், ஸ்ரீமதி. ஞானபூங்கோதையம்மாள் வழக்கப்படி மாணிக்க வாசகர் சரிதையைப் பற்றி பேசினர்கள். பின்னர் "தெய்வீகன்" பத்திராதிபர் ஸ்ரீமான். மே. வே. துரைசாமி உடையாரவர்கள் ;பார்க்கவர் இனிச் செய்ய வேண்டிய வேலை என்பதைப் பற்றி பேசும் பொழுது, சில முக்கிய தீர்மானங்களைப் பிரேரேபித்தார். அதனை ஆமோதித்து, ஸ்ரீமான். வி. ஐ. சொக்கலிங்கம் உடையார் அவர்கள் பேசினர். பிற்பகலில், தமிழின் பெருமை என்ற விஷயத்தைப் பற்றி, ஸ்ரீமான். திரு. வி. கலியாண சுந்தர முதலியார் அவர்கள் சொன்மாரி பொழிந்தனர். கடைசியாக, ஸ்ரீமான். இ. வி. இராமசாமி நாயக்கரவர்கள் "கத்தர்" என்ற விஷயத்தைப் பற்றி நீண்ட நேரம் பேசினர். இதில், பிரசங்கத்தைக் கேட்ட பெண்மணிகள் பலர் தாங்கள் இனி கதருடை தரிப்பதாக வாக்குறுதி செய்தார்கள். சில குலாபிமானிகள், வந்தனங் கூறிய பின்னர், தலைவர்களுக்கு சந்தனந் தாம்பூலாதிகள் வழங்கியதும் அக்ராசனர் முடிவுரையுடன் மகாநாடு கலைந்தது. இம் மகாநாடு செவ்வனே நடைபெற, பெருத்த முயற்சி எடுத்துக்கொண்ட, ஸ்ரீமான். எம். ஆர். வெங்கிடாசல உடையாரவர்களின் குல முன்னேற்ற ஊழியத்தைப் பாராட்டி, "பார்க்கவபந்து" என்னும் பட்டம் இம்மகாநாட்டின் தலைவரால் அளிக்கப்பட்டது. என நமது நிருபர் எழுதுகிறார்.

---

## சோழவந்தான் தேசிய தர்மப் பள்ளிக்கூடத்தின் முதலாது வருடக் கொண்டாட்டம்.

சோழவந்தான் தேசிய தர்மப் பள்ளிக்கூடத்தின் முதலாவது வருடக் கொண்டாட்டம் 12—10—25ந்உ திங்கட்கிழமை ஸ்ரீமான். சௌந்திர பாண்டிய நாடார் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. தலைவர் அவர்களின் முன்னுரைப் பிரசங்கம் முடிவடைந்தவுடன் உபந்யாசகர்களைப் பிரசங்கிக்குமாறு கேட்டுக்கொண்டார். உபந்யாசகர்களான. ஸ்ரீமான்கள். கோமதி சுந்தர முதலியாரவர்கள், "கதரும் புதுப்பாளையம் காந்தி ஆச்ரமமும்" என்ற விஷயமாயும், முனகால பட்டாபிராமய்யர் அவர்கள் "தேசிய கல்வி" என்ற விஷயமாயும், தமிழ் வித்வான் நீலகண்ட முதலியாரவர்கள், "தமிழின் பெருமை" என்ற விஷயமாயும் உபந்யாசம் புரிந்தனர். பின்னர் இப்பள்ளியின் மாணவர்களால் சோழவந்தான் ஸ்ரீமான் மு. சுப்பிரமணிய முதலியாரவர்களால் தான் சிறைவாசம் செய்யுங் காலத்தில் எழுதப்பட்ட 'வீரசிங்கதானாஜி' என்ற மஹாராஷ்டிர சரித்திரத்தை நாடக ரூபமாக நடித்துக் காண்பிக்கப்பட்டது. நாடகம் முடிவடைந்த பின்னர் தலைவர் அவர்களின் முடிவுரைப் பிரசங்கம் முடிந்தவுடன் இரவு 11 மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது.

13—10—25-உ செவ்வாய்க்கிழமை பகல் ஒன்பது மணிக்கு ராமராஜபுரம் ஜெனன்கட்ல R. S. வெங்கிடராமய்யரவர்களால் மாணவர்களுக்கு புத்தகங்களும், பிஸ்கட்களும் பரிசளிக்கப்பட்டது என காரியதரிசி அறிவிக்கிறார்.

---

## விவேஷ கவனிப்பு.

அபிநவ
ஆங்கில போதினி.

இங்கிலீஷ் படிக்கவில்லையே என்ற கவலைவேண்டாம். தங்கள் சொந்த ஜோலிகளுக்கிடையூரின்றி பொது ஜனங்கள் யாவரும் இங்கிலீஷ் பாஷையில் ஆட் பெயர், ஊர்ப் பெயர் முதலியவைகளையும் சகல விதமான தந்தி விஷயங்களையும், லெட்டர்கள் மேல் விலாசங்கள் எழுதும் விதங்களையும், இங்கிலீஷ் இலக்கணத்தின் முக்கியாம்சங்களையும் அதி சீக்கிரத்தில் கற்றுக்கொள்ளக்கூடியதும், அநுபோகத்தில் பிரயோஜனமுள்ளதென்று பொதுஜனங்களால் போற்றப்படுகிற புஸ்தகமிதுவே. சென்ற 12 வருஷங்களாய் ஆயிரக்கணக்கான புஸ்தகங்கள் செலவாய் இப்பொழுது 10-வது தடவை மறுபடியும் அச்சிட்டிருக்கிறோம். புஸ்தகம் 1-க்கு விலை அணா **0—12—0** வி. பி. சார்ஜ் அணா **4.**

V. S. K. சுவாமி அன்ஸன்ஸ்.
புக்ஸெல்லர்ஸ், விளாத்தி குளம்
Via கோவில் பட்டி S. I. R.

இனும்! உயர்ந்த பெரிய டேபில் கெடியாரம் இனும்!!
த "வேம்லி" ரிஜிஸ்டர் செய்த உயர்ந்த
பொன் நிப்புள்ள பவுண்டன்
பேனா 1-க்கு ரூ 3-8-0



நமது கிங் ஜார்ஜ் இளவரசரால் பரிசோதிக்கப்பட்டது.
500 நற்சாக்ஷி பத்திரங்கள் கொண்டது! இந்த பவுண்டன் பேனா ஆல்கனேட் உறையுள்ளதும், 14 காரட்(கோல்ட்) நிப்புள்ளதும, எழுத்துவேலைகள் சுரு சுருப்பாய் எழுதுவதற்கும் நெடுநாள் வரை உழைக்கக்கூடியதும் உயர்ந்த நிக்கல் கிளிப்புடன் பார்வைக்கு அதிக செம்பீரமாயும், ரூபாய் 10 மதிப்பிடக்கூடியது, இப்பேனாவைப்போல் இதுவரையில் கண்டிருக்கமாட்டீர்கள் எனக்கருதவும். மேற்படி பேனா 1-க்கு ரூபா 3-8-0க்கு வாங்குவோர்க்கு பெரிய டேபில் டைம்பீஸ் இலவசமாய் தரப்படும். இரண்டு பேனா ரூ 7-க்கு வாங்குவோருக்கு 18 காரட் ரோல்டு கோல்டு பூவேலை செதுக்கிய உன்னத பாக்கட் கெடியாரம் இலவசமாய் தரப்படும். டிை டேபில் டயம்பீஸ் தனிவிலை ரூ. 4-8-0 டிை பாக்கட் கெடியாரம் தனியாய்விலை ரூ. 8-8-0. கெடியாரங்களுக்கு 5 வருஷம் காரண்டியுடன் அனுப்பிக்கப்படும். தருவித்து திருப்தியில்லாதவர்கள் திருப்பியனுப்பி தங்கள் பணத்தை வாப்பீஸ் பெறலாம்.

ஓ. எம். வி. கம்பெனி,
(**23**-பீட்) மதராஸ். கு

படிக்கப் படிக்க இனிக்கும்! நினைக்க நினைக்க மணக்கும்!!

## சரீர மர்ம சாஸ்த்திரம்

(ஓர் மானிட மர்ம நூல்.

இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும் அவர்களது மர்மஸ்தானங்களின் அமைப்பும், அவைகளின் நேர்மையான உபயோகங்களும், இரதிமன்மத சிருங்கார ரஹஸியங்களும், புதியதம்பதிகளுக்கும் கல்யாணமாகாத சிறுவர் சிறுமிகளுக்கும் இன்றியமையாததுல். 50 படங்களுடன் புஸ்தகம் 1க்கு விலை ரூ. 1(செலவுபிரத்தியேகம்)

மாணிக்க விலாசம் பிரஸ்,
அருணாசல முதலி வீதி, மதருஸ்.

## "தேசபக்தன்"

ஓர் தேசீயத்தமிழ் பத்திரிகை.
பிரதி திங்கள், புதன், வெள்ளிதோறும்வெளிவருவது
விளம்பரத்திற் கேற்றது.
வருடசந்தா ரூபாய் 13. வெளிநாடுகளுக்கு ரூபாய் 16.
காரியஸ்தர்,
"தேசபக்தன்" கொழும்பு.

**28** வருடங்களாய் உலகப்பிரசித்திபெற்ற
வைத்யரத்ன பண்டிட்

## D. கோபாலாசார்லு அவர்களின்

திவ்ய அவுஷதங்கள்.
காலரா அவுஷதங்கள் ப்ளேக் அவுஷதங்கள்
ஒருமுறை உபயோகித்தால் விஷபேதியும், ப்ளேக்கும் பறந்தோடும்

ஜீவாம்ருதம்.

தேகபலம், மனோசக்தி, இந்த்ரிய புஷ்டியைக் கொடுத்து தேகவலிவை யளிக்கும் விலை ரூ. 3—4—0

ப்ருகுவடி.

எக்காரணத்திலுண்டான தாது நஷ்டத்தையும், மேகவெட்டை முதலிய கொடூர வியாதிகளை அறவே யொழிக்கும்.
புட்டி 1க்கு ரூபாய் 2—0—0

ஸித்தமகரத்வஜ.

நபும்சகத்தை வேருடன் தொலைத்து இந்திரிய புஷ்டி கொடுத்து வஜ்ரதேகிகளாகச் செய்யும்.

## ஆயுர்வேதாஸ்ரமம்.

கோவிந்தப்ப நாய்க்கன் தெரு.
காந்திநகர், மதராஸ்,

வெள்ளியை கொடுத்து தங்கத்தைப்
பெறுங்கள்.
வந்தாலும் போனாலும் சரி என்ற
லாட்டரி இல்லை,
கைமேல் பலன் கிடைக்கும்
இது ஹம்பக்கில்லை.
பட்ட பகல் போல் வெட்ட வெளிச்ச
மானது
ஒரு ரூபாய் வெள்ளி நாணயமாகக்
கொடுத்தால் 32

---

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்.

---

பெறலாம்.

அதனை உபயோகித்தவர்கள் அது "தங்கத்திற்குச் சமமான நிறையுள்ளதென்று" கூறியிருக்கின்றனர். மனத்திலும், தேகத்திலுமுள்ள கோளாறுகளைப் போக்கடித்துப் பலஹீனம் அஜீரணம் முதலிய வியாதிகளை காஸ்தமாக கண்டிக்கின்றது.

விபரம் வேண்டுவோர் இன்றே கீழ்க்கண்ட ஜாப்தாவுக்கு எழுதுங்கள்

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
23, பிராட்வே மதராஸ்.

## உண்மையான கதர்.  கெட்டியான கதர்.

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும், மேர்பார்வையாலும், அத்தாட்சிப் பத்திரத்துடனும் நடை பெறுகின்றது. கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்

ஸ்ரீகாந்தி கதராலயத்தார் கைநூலால் கைத்தரியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பததிசெய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள்.

வா. மு. தங்கப்பெருமாள், காங்கிரஸ்கதர் போர்டு காரியதரிசி

ந. ராமசாமி

மானேஜர், ஸ்ரீகாந்தி கதராலயம், திருப்பூர்

வந்தேமாதரம்.

## கரூர் சுயம் கத்தர் ஜவுளிகள்.

தமிழ் நாட்டு கத்தர் போர்டாரால் நற்சாக்ஷி பத்திரம் பெற்ற கீழ் கண்ட கத்தர் ஸ்டோரில் உடை நாணயத்திலும் நெசவு அழுத்தத்திலும் நீடித்து உழைக்கக்கூடியதுமான பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், அங்கவஸ்திரம், வெள்ளை பீஸ்கள். ஷர்டிங், கோட்டிங், சால்வை தினுசுகள் கத்தர் போர்டின் விலைக்கே விற்கப்படும். தேவைக்கு அட்வான்சுடன் ஆர்டர் செய்யுங்கள்.

S. ராமசாமி அய்யர்,

ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர்ஸ் கரூர்.

அத்தாட்சிப்பத்திரம் (தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி) ஸ்ரீமான் எஸ். ராமசாமி அய்யர் ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர் கைநூலால் கைத்தரியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள்,

காரியதரிசி கத்தர், இலாகா.

## ஸ்தம்பனவடி.

இந்திரிய ஸ்கலிதத்திற்கு 3 நாளில் குணம் கொடுத்து தேகத்துக்கு பலத்தையும் ஜீரணசக்தியையும் தாது புஷ்டியையும் உண்டு பண்ணும்.

25 மாத்திரை ரூ. 2—0—0

Vydiapathy Kotta Jayaram Naidu,
Andra Ayurvedic Pharmacy Ltd,
159, Broadway, Madras.

## இம்ப்ரூவ்ட் லீவர்

### பாக்கெட் கெடியாரங்கள்.

ஒவர்லண்ட் பாக்கெட் கெடியாரம் நிக்கில் கூடு, தம்பு தூசி நுழையக் கூடாத ஏற்பாடுயுள்ளது. பிரத்யேகமாய் தருவித்த உயர்ந்த திக்கு கண்ணாடியுள்ளது. 6 லீவர்களுள்ளது. அழகான பெட்டியுடன் ஒரு சங்கிலியும் விலை ரூ. 8—12—0.

பெஸ்ட் பேடண்டு லீவர் வாட்சு விலை ரூ. 4—12—0

(Fido) பிடோ லீவர் கெடிகாரம் சிறிய ரூபம், மிக்க உறுதியானது, அழகுள்ள நிக்கல் கேஸில் அமைந்தது. நேர்த்தியான உறுதியுள்ள அமைப்புள்ளது. உத்திரவாதமுள்ளது. டெஸ்டு செய்த எங்கள் சாமான்களை வாங்குங்கள். எங்கள் நாணயமும் நம்பிக்கையுள்ளதுமான வர்த்தகஸ்தலத்தின் கியாதி ஒரு முறை பரீட்சித்தால் விளங்கும் தயவுசெய்து ஒரு முறை பரீட்சியுங்கள்.

ஜாலால் அண்டு சன்ஸ்,

வெஸ்டு அண்டு கெடியாரம் வியாபாரிகள்,

61, ராட்டன்பஜார், சென்னை.

கலியுகத்தில் "ஓர் மகானின் மகிமை"
மகத்துவமுள்ள மகானால் கலியுக கற்பகமாக
விளங்கும்,
"அருமையான மூலிகையும்"
"தாயத் என்னும் ரட்சையும்"
(எந்த மதஸ்தர்களும உபயோகிக்கத் தக்கவை.)

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை, ஆண் பெண் இருதரத்தார்களுக்கும் உண்டாகும் பலவித நோய்களும், பார்வை, தோஷங்களும், பலவித குஷ்டம், க்ஷயம், வலிப்பு, இளைப்பு, பிர்மை, பைத்தியம், வாத நோய்கள், மேகசம்மந்த வியாதிகள், விஷத்தால் ஏற்படும் பலவித வியாதிகள் முதல் தீராதென்றெண்ணி சகலவிதமான வியாதிகளும், செய்வினைகளும் கவலைகளும ஆச்சரியமாகும்படி பூரணகுணமாகியிருப்பதையும்,

நீண்டநாளாக புத்திரபாக்கியமில்லாதிருந்த அனேகருக்கு புத்திரபாக்கியம் உண்டாயிருப்பதையும், அபாரமான காரியங்களெல்லாம் வெற்றியடைந்திருப்பதையும் ஸ்பெஷல் தாயத் என்னும் (ரட்சைகளால்) கவலைகள் நீங்கி, ஒவ்வொருக்கும் கோரிய காரியங்கள் நிறைவேறியிருப்பதையும்,

இந்த நிமிஷமே பார்க்கலாம்.
ஏராளமான சகலதேசத்தார்களின் நற்சாட்சிகளாலும் காணலாம். தமிழ்வைத்திய சங்கத்தில்
தங்கமெடலும், நற்சாக்ஷியும் பெற்றவை.
அன்புள்ள சகோதர சகோதரிகளே!
கவனியுங்கள்!!

இந்த சமயத்தை கைவிடாதீர்கள். இதுவே நல்ல காலமாகும். வேண்டியவர்கள் உங்கள் முழுவிலாசத்தோடு எதற்காக தேவையிருந்தபோதிலும் ஆரம்ப முதல் சரிவர விபரமெழுதி, பதிலுக்கு (ஸ்டாம்பு) வைத்து கோயமுத்தூர்ஜில்லா மேட்டுப்பாளையம் "பாலசந்திரன் ஆபீஸ்" தலைவர் ஸ்ரீமான் எஸ். எ. கே. பிள்ளை அவர்களுக்கு எழுதிக்கொள்வீர்களானால் விபரமான பதிலும், சகல விபரமும் அனுபந்தங்களும் கிடைக்கும்

எவ்வித வியாதிகளுக்கும் பத்தியமில்லை.
எந்த தேசத்திய ஸ்டாம்புகளும் அனுப்பலாம்

ஈரோடு டைமண்ட் பிரஸில் அச்சிடப்பெற்று ஈ. வெ. ராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.